
Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

தனிப்பிரதி
ரூ.10/-

மலர் - 27 இதழ் - 11 நவம்பர் 2014



பூமியின் மேல் எங்கும்
விதைதரும் சகலவிதப் பூண்டுகளையும்,
சகலவித விருட்சங்களையும்
உங்களுக்கு கொடுத்தேன்.
(ஆதியாகமம் 1:29)

# புதிய வெளியீடு



மிக நேர்த்தியாக அச்சிடப்பட்டு
தேர்ந்த முறையில்
பைண்டிங் செய்யப்பட்ட
பாட்டுப் புத்தகம் வேண்டுவோர்
எங்களை தொடர்பு கொள்ளவும்.

**550 தமிழ்ப் பாடல்கள்**
**50 ஆங்கிலப் பாடல்கள்**
**40 தமிழ், ஆங்கில**
**குறும்பாடல்கள்**

## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| 1. ஆசிரியர் உரை | 1 |
| 2. ஏன் நாங்கள் கீழ்ப்படிதலில் | 9 |
| 3. பெண்கள் பகுதி | 13 |
| 4. வாலிபர் பகுதி | 17 |
| 5. சிறுவர் பகுதி | 20 |
| 6. நீ ஏன் ஒரு கிறுஸ்தவன்? | 22 |
| 7. இவருக்குச் செவி .. | 24 |
| 8. விசுவாசித்தான்..அதை.. | 27 |
| 9. கெட்டகுமாரன் ... | 30 |


- ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை/அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 27 NOVEMBER - 2014 Issue - 11**


ஆசிரியர் உரை

# பீடம், ஏத் பீடம்

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, " பீடம் " என்னும் வார்த்தை நமக்கு அந்நியமாகத் தோன்றினாலும், இவ்வார்த்தை வேதாகமத்திற்கும், ஆன்மீகத்திற்கும் சற்றும் சம்பந்தமில்லாதது என்று நம்மால் சொல்லி விட முடியாது. ஏனெனில், " பலிபீடம் " (ஆதி. 8:20), " தகன பலி பீடம் " (யாத். 27:2), "தூப பீடம்" (யாத். 30:1) என்று பல பீடங்கள் பற்றி பரிசுத்த வேதாகமம் பேசுகிறது. வேதாகமம் பேசும் இப்பீடங்கள், அந்தந்த சூழ்நிலைக்கும், தேவைக்குமேற்ப மண்ணினாலும் (யாத். 20:24), கற்களினாலும் (உபா. 27:5,6) மரத்தாலும், இன்னும் வெண்கலம் போன்ற உலோகத்தாலும் (யாத். 27:5,6) அமைக்கப்பட்டுள்ளன. பொதுவாக, பீடம் என்பது தரையிலிருந்து ஒரு குறிப்பிட்ட உயரத்தில், தெய்வீக நோக்கத்திற்காக அமைக்கப்படும் ஒரு மேடை யாகும். இப்பொருளினடிப்படையில் தான் பிரசங்கத்தின் போது பயன்படுத்தப் படும் மேடை "பிரசங்க பீடம்" என்று அழைக்கப்படுகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள நோக்கங்களைத் தவிர, இன்னுமொரு நோக்கத் திற்காகவும் பீடங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக வேதாகமத்தில் காணமுடிகிறது. ஆம், அமலேக்கின் கை இஸ்ரவேலுக்கு விரோதமாயிருந்தது என்பதை தலை முறை தோறும் மறக்கக்கூடாது என்பதற்காக "யெகோவா நிசி" என்ற பீடம் வனாந்திர யாத்திரையின் போது ஓர் நினைவுச் சின்னமாகக் கட்டப்பட்டுள்ளது (யாத். 17:15,16). நம்முடைய இம்மாதத் தலைப்பை அலங்கரிக்கும் "ஏத் பீடம்" இவ்வகையைச் சார்ந்த ஒன்றே (யோசுவா 22:34).

வாரந்தோறும், வல்லமையான தேவ வார்த்தைகளை அள்ளி வீசும் பிரசங்க பீடமே எங்களைப் பெரிதாக ஒன்றும் செய்துவிட முடிவதில்லை. அப்படி யிருக்கும் போது என்றைக்கோ கட்டப்பட்ட இந்த "ஏத் பீடம்" எங்களுக்கு

என்னத்தைக் கற்றுக் கொடுத்து விடப்போகிறது என்று சொல்லுகிறீர்களா? நியாயம் தான், எனக்கும் புரிகிறது. ஆயினும், "முன்பு எழுதப்பட்டவை களெல்லாம் நமக்குப் போதனையாக எழுதப்பட்டுள்ளது ", என்று பவுலடியார் உரோமையருக்குச் சொல்லியிருப்பதால் (ரோமர் 15:4), இந்த "ஏத் பீடம்" நமக்கு ஏதாவது போதிக்கக்கூடும் என்றே தெரிகிறது. ஆகையால், இப்பீடத்திற்குப் பெரிதாக சேதத்தை ஏற்படுத்தாமல், முட்டி மோதிப் பார்த்து விடுவோம். நம்முடைய இம்முயற்சிக்கு பீடத்தின் பின்னணித் தகவல்கள் அவசியமா யிருக்கிறபடியால், நமது வழக்கத்தின்படியாக நம் சிந்தையை அதற்குள்ளாகச் செலுத்துவோம். ரெடியா?.

ஏத் பீடம் பற்றி பேசும் அதிகாரம் யோசுவா நூலில் இடம் பெற்றுள்ளது. இந்த யோசுவா சரித்திர நூல் சிறப்புக்குரிய ஓர் நூல். எப்படியெனில், புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர் நடபடிகள் எப்படிப்பட்டதோர் இடத்தைப் பெற்றிருக் கிறதோ, அதற்கு இணையான முக்கியத்துவம் பழைய ஏற்பாட்டில் இதற்கு உண்டு. பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து நூல்களாகிய ஆகமங்கள், மனிதனின் ஆரம்பம், மோசேயின் வாழ்க்கை மற்றும் இஸ்ரவேல் தேசம் கட்டப்படுவதற்குத் தேவையான பிரமாணங்கள் பற்றிப் பேசுகிறது. தொடர்ந்து வரக்கூடிய யோசுவா நூல், இஸ்ரவேல் தேசம் கட்டப்பட்டது குறித்து விவரிக் கிறது. அதுபோல், புதிய ஏற்பாட்டில் முதல் நான்கு நூல்களாகிய சுவிசேஷங்கள் இயேசுவின் பிறப்பு மற்றும் வாழ்க்கை பற்றியும், சபையாகிய ராஜ்ஜியம் கட்டப் பட்டு ஆளுகை செய்யப்படுவதற்குத் தேவையான புதிய பிரமாணங்கள் பற்றி யும் பேசுகிறது. அடுத்து வரக்கூடிய சபை சரித்திரமாகிய அப்போஸ்தலர் நட படிகள், இயேசு கிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தின்படியும், முன்னறிவின் படியும் சபையாகிய ராஜ்ஜியம் எப்படி ஆரம்பமானது என்பது குறித்து எடுத்துச் சொல்லுகிறது.

சரி, ஏத் பீடம் சம்பந்தப்பட்ட செயல்பாடுகள் தன்னிகரில்லா தலைவன் யோசுவாவின் நாட்களில் நடந்திருந்தாலும், இதைச் சரியாகப் புரிந்து கொள்வ தற்கு நாம் மோசேயின் நாட்களுக்குள் சென்றாக வேண்டும். ஆம், மோ சேயின் சீரிய தலைமையின் கீழாக எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்ட ஜனங்கள் ஒரு வழியாக மோவாபின் சமவெளியை வந்தடைந்தார்கள். அடுத்த கட்டம் யோர்தானைக் கடந்து, வாக்குத்தத்த பூமியில் காலடி எடுத்து வைக்க வேண்டும். ஆனால், மேரிபாவின் தண்ணீர்களண்டையில், மோசேயின் செயல்பாடு மோசமாகிப் போனதால், கானானைக் காணும் பாக்கியத்தை தேவன் அவனுக்கு மறுத்துவிட்டார் (எண் 20:12). ஆகவே,இஸ்ரவேல் ஜனங்கள் யோர்தானுக்கு இப்புறத்தில் காத்திருக்க வேண்டிய சூழல். அங்கே, ரூபன் புத்திரரும், காத் புத்திரரும் தங்களுக்கு ஆடு, மாடுகள் மிகவும் திரளாயிருந்த படியாலும், தங்கியிருந்த அச்சமவெளி, ஆடு, மாடுகளுக்குத் தோதான இடமாகத் தெரிந்தபடியாலும், யோர்தானுக்கு இப்புறத்திலேயே காணியாட்சி தர வேண்டுமென்று மோசேயையும், எலெயெசரையும், பிரபுக்களையும் பார்த்து வேண்டுகோள் வைத்தனர் (எண். 32:1-5). அவர்கள் பார்வைக்கு அவர்கள் போட்ட கணக்கு சரியானதே. ஆனால், மோசேயின் பார்வைக்கோ அவர்கள் வேண்டுகோள் பரிசீலனைக்கு உரியதாகத் தெரியவில்லை. "*அப்பொழுது மோசே, காத்புத்திரரையும், ரூபன் புத்திரரையும்*

*நோக்கி; உங்கள் சகோதரர் யுத்தத்திற்குப் போகையில், நீங்கள் இங்கே இருப்பீர்களோ? கர்த்தர், இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்த தேசத்திற்கு அவர்கள் போகாதபடிக்கு, நீங்கள் அவர்கள் இருதயத்தைத் திடனற்றுப் போகப் பண்ணுகிறதென்ன?* " (எண். 32:6,7) என்ற கேள்விகளை எழுப்பினதோடு, சில சரித்திர நிகழ்வுகளையும் எடுத்துக்கூறி கோரிக்கையை நிராகரித்தார் (எண். 32:8-15).

ஆனால், இந்த விடாக்கண்டர்கள் மசிந்தபாடில்லை. ஆம், அவர்கள் மோசேயின் சமீபத்தில் வந்து, தலைவா, நீங்கள் நினைப்பது தவறு. நாங்கள் எங்கள் சகோதரரோடு யுத்தத்திற்கு வருவோம். இஸ்ரவேல் புத்திரர் யாவரும் தங்கள், தங்கள் சுதந்தரத்தைச் சுதந்தரிக்குமளவும் நாங்கள் வீடும் திரும்ப மாட் டோம். சுதந்தரித்ததற்குப் பிறகு, நாங்கள் அதில் பங்கும் கேட்கமாட்டோம் என்று உறுதிமொழி தந்ததோடு, (எண். 32:16,19). " *எங்கள் ஆண்டவன் கட்டளை யிட்டபடியே உமது ஊழியக்காரராகிய நாங்கள் செய்வோம்* " என்றார்கள் (எண். 32:28). இப்படி மிகவும் கண்டிப்பான முறையில் அவர்களிடம் உறுதி மொழி பெற்ற மோசே தேவ சித்தத்தின்படி அவர்கள் கண்களுக்கு முன்பாக மரித்துப் போயிருந்தாலும் இவர்கள் கொடுத்த வாக்கின்படி யோசுவாவின் நாட்களில் செய்து முடித்தார்கள். தேவ மனிதனிடத்தில் கொடுத்த வாக்கை எப்படி நிறைவேற்றினார்கள் என்பதைக் கவனிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

ஆம், இப்பொழுது யோர்தானைக் கடந்தாயிற்று, கானானையும் சுதந்தரித்தாயிற்று. " *கர்த்தர் இஸ்ரவேல் குடும்பத்தாருக்குச் சொல்லியிருந்த நல்வார்த்தைகளிளெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப் போகவில்லை; எல்லாம் நிறைவேறிற்று* " (யோசுவா 21:45). " *அப்பொழுது யோசுவா ரூபனி யரையும், காத்தியரையும், மனாசேயின் பாதிக் கோத்திரத்தையும் அழைத்து, அவர்களை நோக்கி; கர்த்தருடைய தாசனாகிய மோசே உங்களுக்குக் கட்டளை யிட்டவைகளையெல்லாம் நீங்கள் கைக் கொண்டீர்கள்; நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவிலும் என் சொற்படி செய்தீர்கள். நீங்கள் இதுவரைக்கும் அநேக நாளாய் உங்கள சகோதரரைக் கைவிடாமல், உங்கள் தேவனாகிய கர்த்தருடைய கட்டளையைக் காத்துக்கொண்டு நடந்தீர்கள்* " (யோசுவா 22:1,3) என்று உச்சி முகர்ந்து மெச்சினதோடு, கர்த்தரின் தாசனாகிய மோசே உங்களுக்குக் கற்பித்த கற்பனைகளின்படியேயும், நியாயப்பிரமாணத்தின் படியேயும் செய்யும்படி மாத்திரம் வெகு சாவதானமாயிருங்கள் என்று புத்தியும் சொல்லி, ஆசீர்வதித்து, நீங்கள் மிகுந்த ஐசுவரியத்தோடும், மகா ஏராளமான ஆடு, மாடுகளோடும், பொன், வெள்ளி, வெண்கலம், இரும்போடும், அநேக வஸ்திரங்களோடும் உங்கள் கூடாரங்களுக்குத் திரும்பி, உங்கள் சத்துருக் களிடத்திலே கொள்ளையிட்டதை உங்கள் சகோதரரோடே பங்கிட்டுக் கொள்ளுங்கள் என்றான் (யோசுவா 22:4,8).

இப்படியாக தங்கள் காணியாட்சிக்கு மிகுந்த ஐசுவரியத்தோடு திரும்பும் போது இந்த இரண்டரைக் கோத்தரத்தார் கானானின் எல்லையிலிருக்கிற யோர்தானை வந்தடைந்தார்கள். யோர்தானைக் கடக்கும் முன்பாக அவர்கள் கூடிப்பேசி, தேசபக்தியினிமித்தமும், தேவ பயத்தினிமித்தமும் ஒரு பெரிய பீடத்தைக் கட்டினார்கள் (யோசுவா 22:9,10). இவர்கள் பீடம் கட்டினதை

இஸ்ரவேல் புத்திரர் கேள்விப்பட்டார்கள் (யோசுவா 22:11). அதாவது, பிரதான மண்ணில் இருந்த $9^1/_2$ கோத்திரத்தார் கேள்விப்பட்டு இவர்களோடு யுத்தம் செய்ய சீலோவிலே கூடிவிட்டார்கள் (யோசுவா 22:12). ஆம், பீடம் கட்டின $2^1/_2$ கோத்திரத்தாரை தங்கள் சகோதரர் என்றோ, கானானை மேற்கொள்ளத் தங்களுக்குத் தோள் கொடுத்தவர்கள் என்றோ நினைக்கவில்லை. அவர்கள் எடுத்த இந்தக் கடுமையான நிலைப்பாட்டுக்குத் தனிப்பட்ட விரோதமோ, பங்குச் சண்டையோ காரணம் அல்ல. மாறாக, " கர்த்தரைப் பின்பற்றாதபடிக்குப் புரண்டு, இந்நாளிலே கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம் பண்ணி விட்டார்கள் " என்ற எண்ணம் தான் (யோசுவா 2:16) இதற்கு அடிப்படை.

நல்லவேளை, யுத்தத்திற்கு ஆயத்தமாகிவிட்டு, யுத்தத்திற்குப் போகும் முன் ஆசாரியனாகிய பினெகாசையும், பத்துக் கோத்திரங்களின் பிரபுக் களையும் அனுப்பி அவர்கள் செயலுக்கு விளக்கங் கேட்க முடிவெடுத்தார்கள். இவர்களின் அநியாயமான குற்றசாட்டைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்ட $2^1/_2$ கோத்திரத்தாரின் பதிலைப் பாருங்கள். " *அப்பொழுது ரூபன் புத்திரரும், காத் புத்திரரும், மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரும் இஸ்ரவேலின் ஆயிர வரின் தலைவருக்குப் பிரதியுத்திரமாக; தேவாதி தேவனாகிய கர்த்தர், தேவாதி தேவனாகிய கர்த்தரே அதை அறிந்திருக்கிறார்; இஸ்ரவேலரும் அறிந்து கொள்வார்கள், அது இரண்டகத்தினாலாவது, கர்த்தருடைய கட்டளைக்கு விரோதமான துரோகத்தினாலாவது செய்யப்பட்டதானால், இந்நாட்களில் அவர் எங்களைக் காப்பாற்றாமல் இருக்கக்கடவர். ஒரு காரியத்தைக் குறித்து நாங்கள் எங்களுக்கு அந்தப் பீடத்தைக் கட்டினதே அல்லாமல், கர்த்தரைப் பின்பற்றாத படிக்கு விலகுவதற்காவது, அதின்மேல் சர்வாங்க தகன பலியையாகிலும், போஜன பலியையாகிலும், சமாதான பலிகளையாகிலும் செலுத்துகிறதற் காவது அதைச் செய்ததுண்டானால் கர்த்தர் அதை விசாரிப்பாராக* " (யோசு வா 22: 22,23) என்று சொன்னதோடு நிற்காமல், கர்த்தரிடத்தில் உங்களுக்குப் பங்கில்லை என்று உங்கள் பிள்ளைகள் நாளைக்கு எங்கள் பிள்ளைகளோடே சொல்லாதபடிக்குமே, ஒரு பீடத்தை உண்டு பண்ணினோம். நாளைக்கு எங்க ளோடாவது, எங்கள் சந்ததியோரோடாவது அப்படிச் செய்வார்களானால், அப்பொழுது சர்வாங்க தகனத்திற்கும் அல்ல, பலிக்கும் அல்ல, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே சாட்சியாக எங்கள் பிதாக்கள் உண்டு பண்ணின பீடத்தைப் பாருங்கள் என்று சொல்லலாமே என்றார்கள் (யோசுவா 22:27,29).

ரூபன், காத், மனாசேயின் பாதிக் கோத்திரத்தாருடைய பொருள் பொதிந்த இப்பதில் ஆசாரினாகிய பினெகாசுக்கும், ஏனைய தலைவர்களுக்கும் ஏற்புடையதாயிருந்தபடியால் அவர்களின் கோபமும், வேகமும் தணிந்து இப்பிரச்சினைக்கு அங்கே முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. $9^1/_2$ கோத்திரத்தார் திரும்பி தங்கள் எல்லைகளுக்குச் சென்றார்கள். இந்த $2^1/_2$ கோத்திரத்தார் அதற்கு " ஏத் " என்று பேரிட்டு யோர்தானைக் கடந்து, தங்கள் காணியாட்சியி லிருந்த மனைவி மக்களைச் சென்றடைந்தார்கள்.

நமக்குப் புதிராக இருந்த இந்த ஏத் பீடத்தின் பின்னணி இதுதான். இப்பீடம் நமக்குப் பல பாடங்களைக் கொடுக்கக்கூடியதாக இருந்தாலும், ஒரு சிலவற்றை மாத்திரம் நாம் இங்கே கவனிப்போம்.

## I. உண்மையுள்ளவர்களைத் தேவன் ஆசீர்வதிக்கிறார்

ஏத் பீடத்தைச் சுற்றி நடக்கும் போது நம்மால் கற்றுக் கொள்ள முடிகிற முதல் பாடம், தேவன் அவருக்கு உண்மையாய் நடப்பவர்களை ஆசீர்வதிக் கிறார் என்பது.

இஸ்ரவேலின் தேவன் ஆசீர்வாதத்தின் தேவன். ஆம், அவர் ஆசீர் வதிக்கிற தேவன். முற்பிதாக்களின் முதலாமவராகிய ஆபிரகாமை அழைத்த போது, " *நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்* " என்று சொல்லியே அழைத்தார் (ஆதி. 12:4). ஆயினும், ஆசீர்வாதம் என்றால் என்ன? அவர் எப்படிப்பட்டவர்களை ஆசீர்வதிக்கிறார்? வேத வசனங்களின் போதனைக்கு மாறான முறையில் செல்வம் சேர்க்கப்பட்டால் கூட அது கர்த்தரின் ஆசீர்வாதமாகப் பார்க்கப்பட்டு, பேசவும் படுகிறது. கண்டிப்பாக அது உண்மை அல்ல. ஏனெனில் " *உண்மை யுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்....* " (நீதி. 28:20) என்றே நாம் வாசிக்கிறோம். மேலும், உபாகமம் 28-ம் அதிகாரம் இதுபற்றித் தெளிவாகச் சொல்லுகிறது. " *நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்துக்குச் செவி கொடுக்கும் போது, இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உன் மேல் வந்து உனக்குப் பலிக்கும்* " (28:2) என்றும், " *இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய எல்லாக் கற்பனைகளின்படியும், கட்டளைகளின்படியும் நடக்கக் கவனமாயிருப்பதற்குச் செவிகொடாமற் போவாயாகில் இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன் மேல் வந்து உனக்குப் பலிக்கும்* " (28:15) என்றும் கூறுகிறது. ஆகையால், கர்த்தருடைய கட்டளைகளைக் கைக்கொள்வதால் கிடைக்கும் ஆசீர்வாதமே கர்த்தரிடத்தி லிருந்து வருவதாக உள்ளது. இப்படிப்பட்ட ஐசுவரியத்தோடு தான் தேவன் வேதனையைக் கூட்டமாட்டார் (நீதி. 10:22). இப்படிப்பட்ட செல்வமும், ஐசுவரியமும் தான் தேவ ஆசீர்வாதமாக ரூபனியருக்கும், காத்தியருக்கும், மனாசேயின் பாதிக்கோத்திரத்தாருக்கும் கிடைத்தது. யோர்தானுக்கு இப்புறத்தில் இருந்தபோதே அவர்களுக்கு மிகவும் திரளான ஆடுமாடுகள் இருந்தது. மோவாபின் சமவெளியில் மோசேக்குக் கொடுத்த வாக்கையும் நிறை வேற்றிவிட்டார்கள். இது குறித்து யோசுவா, " *மோசேயின் கட்டளைக்கும், என் சொல்லுக்கும் கீழ்ப்படிந்ததோடல்லாமல், உங்கள் தேவனாகிய கர்த்தருடைய கட்டளையைக் காத்துக் கொண்டு நடந்தீர்கள்* " என்று கூறுகிறார் (யோசுவா 22:1,3). அதற்கான பலன் தான் மிகுந்த ஐசுவரியமும், மகா ஏராளமான ஆடு மாடுகளும், பொன், வெள்ளி போன்றவைகளும், அநேக வஸ்திரங்களும். (யோசுவா 22:8) ஆக, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர் களைத் தேவன் சரீரப் பிரகாரமாக ஆசீர்வதிக்கிறவராகவே இருக்கிறார்.

ஓர் உண்மையை தேவனை நேசிக்கும் நாம் இங்கே தெரிந்து கொள்ள வேண்டும். சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்கள் இப்பூமியோடு முடிந்து போகக் கூடியது. " *உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை. இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம்* " (1 தீமோ. 6:7) என்று பவுல் திட்டமாகக் கூறியுள்ளார். ஆகவே, சரீர நன்மைகளுக்காகவே

தேவனைத் தேடுவதை நிறுத்தி விட்டு, என்றென்றும் அழியாத ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள்மேல் நம் சிந்தையை வைக்க வேண்டும். இந்த ஆசீர் வாதங்கள் "*கிறிஸ்துவுக்குள்* " கிடைக்கிறதாக உள்ளது (எபே. 1:3). இந்த ஆசீர் வாதங்களைப் பெற்றுக்கொள்ள நாம் கிறிஸ்துவைத் தெரிந்தவர்களாக, கிறிஸ்துவின் உபதேசத்தை அறிந்தவர்களாக இருந்தால் மட்டும் போதாது. மாறாக, கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசங்களுக்குக் கீழ்ப்படிவதின் மூலமாக " *கிறிஸ்துவுக்குள் வந்து* " , " *கிறிஸ்துவுக்குள்* " வாழ்கிறவர்களாக இருக்க வேண்டும். இதன் மூலம் பூமிக்குரிய ஆசீர்வாதங்களையும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் நாம் சுதந்தரித்துக் கொள்ள முடியும்.

## II. ஒன்பதரைக் கோத்திரத்தாரின் பிரமாணப் பிடிப்பு

ஏத் பீடத்தைச் சுற்றி நடக்கும் போது நம்மால் கற்றுக் கொள்ள முடிகிற அடுத்த பாடம், ஒன்பதரைக் கோத்திரத்தாருக்கு மோசேயின் பிரமாணங்களின் மீதிருந்த அபாரப் பிடிப்பு பற்றியது.

பொதுவாக, வேத பிரமாணங்களில் நாட்டமுடையவர்களை நாம் இரண்டு வகையாகப் பிரித்துவிடலாம். அதில் முதல் வகை, நம்மளவில் அவைகளை அறிந்து, நம்மால் முடிந்தவரை அவைகளைக் கைக்கொள் பவர்கள். இரண்டாவது வகை, நாம் சரியாகக் கைக்கொள்வது மாத்திரமல்ல, பிறரும் சரியாகக் கைக்கொள்ளுகிறார்களா என்பதை உறுதி செய்து கொள்பவர்கள். கானானின் பிரதான மண்ணில் வாழ்ந்த $9^1/_2$ கோத்திரத்தார் இந்த இரண்டாவது வகையைச் சார்ந்தவர்களாகவே இருந்துள்ளனர். எப்படி யெனில், யுத்தமெல்லாம் ஓய்ந்து தங்களுக்கான கோத்திரப்பங்கும், கொள்ளையில் கிடைத்த பங்கும் கிடைத்தாயிற்று. அவர்கள் நினைத்திருந்தால், தங்கள் வேலை உண்டு, வெட்டி உண்டு என்று இருந்திருக்கலாம். யோசுவாவும் அதைப் பற்றி ஒன்றும் சொல்லியிருக்கமாட்டார். ஆயினும், அவர்கள் அப்படி யிருக்கவில்லை.

எப்படியெனில், தங்களைச் சார்ந்த அந்த $2^1/_2$ கோத்திரத்தார் ஊர் திரும்பும்போது யோர்தானுக்கு இப்புறத்தில், தங்கள் எல்லையில் ஒரு பீடம் கட்டி விட்டார்கள் என்று " கேள்விப்பட்டபோது ", சபையாரெல்லாரும் அவர்களுக்கு விரோதமாக சீலோவில் கூடி விட்டார்கள். தங்கள் சகோதரரையே எதிர்க்க ஏகமாய்க் கூடிவிட்டார்கள். இந்த $2^1/_2$ கோத்திரத்தாரின் செயல் ஏற்கனவே அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மோசேயின் வழிபாட்டு முறைமைக்கும், பிரமாணங்களுக்கும் மாறாக இருந்தது என்று கண்டார்கள். அங்கே அவர்கள் எடுத்துரைத்ததை சற்று கவனமாகப் பாருங்கள். " *உங்கள் காணியாட்சியான தேசம் தீட்டாயிருந்ததானால், கர்த்தருடைய வாசஸ்தலம் தங்குகிற கர்த்தரு டைய காணியாட்சியான அக்கரையிலுள்ள தேசத்துக்கு வந்து, எங்கள் நடுவே காணியாட்சி பெற்றுக்கொள்ளலாமே; நீங்கள் நம்முடைய தேவனாகிய கர்த்தரின் பலி பீடத்தையல்லாமல், உங்களுக்கு வேறொரு பீடத்தைக் கட்டுகிற தினாலே, கர்த்தருக்கும், எங்களுக்கும் விரோதமான இரண்டகம் பண்ணா திருங்கள்* " என்றார்கள் (யோசுவா 22:19).

அதாவது, கொடுக்கப்பட்ட தொழுகை முறைக்கு மாறாக ஏன் ஒன்றைச் செய்கிறீர்கள்? அதைத் தவிர்ப்பதற்கு எங்கள் காணியாட்சியில் கூட உங்க ளுக்குப் பங்கு தர ஆயத்தமாயிருக்கிறோம். மோசேயின் பிரமாணத்திற்கு

மாறான வழிபாட்டு முறையை, தொழுகை முறையை எங்களால் ஏற்றுக் கொள்ளவோ, அனுமதிக்கவோ முடியாது என்று திட்டமாகக் கூறிவிட்டார்கள். இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மோசேயின் பிரமாணத்தின்படியான பக்தி முறையின் மீதியிருந்த பக்தி வைராக்கியம் நம்மில் எத்தனை பேருக்குள்ளது?

அருமையானவர்களே, கிறிஸ்துவின் சிலுவைக்குப் பின்பாக வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கான தொழுகை முறை கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளது (யோவான் 4:24) " தேவ ஆவியினால் கொடுக்கப்பட்டுள்ள உபதேசங்களும், ஆராதனை முறைமைகளும் நம் பக்தி வாழ்வுக்குப் போது மானதாக உள்ளது " (2 தீமோத்தேயு 3:16,17). அப்படியிருக்கும் போது, கொடுக் கப்பட்டதற்கு மாறான உபதேச முறைக்கு நாம் துணை போகலாமா? அதை அனுமதிக்கலாமா? அந்த $9^1/_2$ கோத்திரத்தாரின் பிரச்சினை அதுதான். தேவையானால் எங்கள் காணியாட்சியைப் பிரித்து உங்களுக்குக் கொடுக்கத் தயார். ஆனால், எங்கள் பக்தி முறையைக் கூறுபோட மாத்திரம் யாருக்கும் அனுமதியில்லை என்பது தானே.

இப்படிப்பட்ட வைராக்கியம் தான் தேவ காரியத்தில் நம் எல்லோருக்கும் தேவைப்படுகிறது. கிறிஸ்துவின் சுவிசேஷம் தான் நம்மை இரட்சிக்கிறது (மாற்கு 16:15,16; அப். 2:38). ஆனால், நடைமுறையில் கிறிஸ்தவ உலகில் என்ன நடக்கிறது? கிறிஸ்துவின் சுவிசேஷமும், கிறிஸ்துவின் வார்த்தைகளும் பின்னுக்குத் தளப்பட்டு, பழைய பிரமாணத்தின் கோட்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இந்த நிலை நம்முடைய பக்தி வாழ்க்கையில் மாற்றப் பட்டாக வேண்டும். இதற்காக நாம் $9^1/_2$ கோத்திரத்தார் போல் என்ன விலை கொடுக்கவும் தயாராக வேண்டும் !

## III. இரண்டரைக் கோத்திரத்தாரின் எதிர்கால சந்ததி பற்றிய கவலை

ஏத் பீடத்தைச் சுற்றி நடக்கும் போது நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற இன்னுமொரு பாடம், அந்த இரண்டரைக் கோத்திரத்தாருக்குத் தங்கள் பிள்ளைகளின் ஆன்மீகக் காரியங்கள் பற்றிய கவலை குறித்தது.

நாம் வாழக்கூடிய இந்த சமுதாயம் அவரவர்களின் ஆன்மீகக் காரியங்கள் பற்றிக் கூட பெரும்பாலும் கவலைப்படுகிற மாதிரி தெரியவில்லை. வெந்ததைத் தின்போம் விதி வந்தால் சாவோம் என்பது போல தான் காலங் களைக் கடத்திக் கொண்டுள்ளது. யதார்த்த நிலை அப்படியிருக்கும் போது, எங்கே போய் பிள்ளைகளுக்காகவும், அடுத்த தலைமுறைக்காகவும் கவலைப் படுவது? சரித்திரத்தின் வேறெந்தத் தலைமுறையில் வாழ்ந்த இளம் சமுதாயத்தை விட மிகுந்த சவாலை எதிர்கொண்டிருப்பது இப்பொழுதிருக்கிற தலைமுறையே. இதிலே மாற்றுக் கருத்து பெரிதாக இருக்காது என்று நம்புகிறேன். கற்பு கூட கடைச்சரக்காகி விட்ட காலம் இது. எங்களை யாரும் எவ்விதக் கட்டுப்பாட்டுக்குள்ளாகவும் கொண்டு வர நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை என்று கங்கணம் கட்டித் தலைதெறிக்க ஓடிக்கொண்டிருக்கிறது இளைஞர் பட்டாளம். பெற்றெடுத்தவர்கள், எழுத்தறிவித்தவர்கள், பிழைப்புக் கொடுத்தவர்கள் என்று யாரையும் இவர்கள் மனதார மதிப்பதில்லை.

மரியாதை கொடுப்பதும், மதித்து நடப்பதும் தங்களுக்கு இழுக்கு என்ற நினைப்பு ஆழமாகப் பதிந்திருக்கிறது. கிறிஸ்தவ சமுதாயத்தைச் சார்ந்த இளம் தலை முறையும் பெரிதாக இதற்கு விதிவிலக்காக இல்லை என்பது தாங்க முடியாத வேதனை. பெற்றோர்கள் இந்த அவல நிலையை மாற்றும்படி முன்னுரிமை கொடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

ஆனால், இந்த இரண்டரை கோத்திரத்தார், இன்றைய பெற்றோர் களின் எண்ணங்களுக்கு மாறாக எதிர்கால சந்ததியாரின் பக்தி வாழ்வு குறித்து அதிகம் கவலைப்பட்டு, அதற்காகச் செயல்பட்டும் இருக்கிறார்கள்.

ஆம், கானானின் பிரதான மண்ணிலிருந்து புறப்படும் போது, பொன், வெள்ளி மட்டுமல்லாமல் ஏராளமான கால்நடைகளும் யோசுவாவினால் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டு, மிகுந்த ஐசுவரியத்தோடு கிளம்பியுள்ளார்கள். (யோசுவா 22:8). தங்கள் மனைவி, மக்கள் மற்றும் செல்வங்களை எல்லாம் விட்டு வந்து வெகுநாள் ஆகிவிட்டது. அங்கே நாமாக இருந்திருந்தால் என்ன செய்திருப்போம்? குதிரைக்குக் கடிவாளம் போட்ட மாதிரி வீடு நோக்கி நம் மனதையும், கண்களையும் பதித்து, நேராக வாசலில் போய் நின்று " இந்தா பிடி " என்று இறக்கி வைத்திருப்போம். ஆனால், இந்த இரண்டரைக் கோத்திரத் தார் தங்களிடம் இருந்த திராளன ஐசுவரியம் பாதுகாப்பான முறையில் வீடு போய் சேர வேண்டுமென்பது பற்றிக் கவலைப்படாமல், தங்களுடைய பிள்ளை களின் பக்தி வாழ்வும், ஆன்மாவும் எதிர்காலத்தில் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்று கவலைப்பட்டிருக்கிறார்கள். அதன் விளைவு தான், கட்டப் பட்ட அந்த பெரும் பீடம். பிள்ளைகளுடைய எதிர்கால பாதுகாப்புக்குத் தேவை குவிக்கப்படும் செல்வமா? அல்லது காட்டப்படும் பக்தி நெறியா? என்ற கேள்வி வந்த போது, தெளிவாக முடிவெடுத்து நீதியின் பக்கம் உறுதியாக நின்றிருக் கிறார்கள். பிரதான மண்ணிலிருந்து எதிர்ப்பு வந்தபோதுகூட கலங்காமல் தங்கள் கவலை எல்லாம் எங்களுடைய பிள்ளைகளின் நாளைய பக்தி பற்றியதே என்பதைக் கூவிகூவிச் சொல்லி வழிக்கு வரவைத்தார்கள்.

அருமையானவர்களே! நாம் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? நம்முடைய பிள்ளைகளின் பக்திக் காரியங்களைக் குறித்த அக்கறையும், எதிர் கால சந்ததியாரின் பக்தி நிலையைக் குறித்த கவலையும் நம்மிடம் இருக்கிறதா? பிள்ளைகளுக்குக் கல்வி, வீடு, வாசல், வேலை, சொத்து, சுகம், திருமணம் என்று இப்படி எத்தனையோ காரியங்களை முக்கியம் என்று எண்ணிச் செயல் படுகிற நாம், அவர்களின் பக்தி மேம்பாட்டுக்காக ஏதாவது சிரத்தை எடுத்துக் கொண்டுள்ளோமா? சொல்லுங்கள். பிள்ளைகளை சர்வ வல்ல தேவனண்டை நிற்க வைப்பதைக் காட்டிலும் அவர்களுக்குப் பெரிதான பாதுகாப்பு எதுவுமே இல்லை. யோர்தானுக்கு இப்புறத்தில் இருந்த அந்த இரண்டரைக் கோத்திரத் தார் என்றைக்கோ உணர்ந்து கொண்ட இப்பேருண்மையை, நாம் இன்றைக் காகிலும் உணர்ந்து செயல்படக் கூடாதா? அப்படிச் செயல்படுவோமானால் பிள்ளைகளின் இம்மையும், மறுமையும் நிச்சயம் பாதுகாப்பாக இருக்கும்.

ஏத் பீடத்தைச் சுற்றி நடந்தபொழுது நாம் கற்றுக்கொண்ட இப்பாடங்கள் நமக்குப் பயனுள்ளதாக இருப்பதாக! ஆமென்.

# ஏன் நாங்கள் கீழ்ப்படிதலில் விசுவாசம் வைக்கிறோம்?



**Bro. J.C. சோட்**

கீழ்ப்படிதல் கற்றுக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான பாடமாயிருக்கிறது. எனவே, தொடர்ந்து சொல்லப்படப் போகின்ற காரியங்கள் குறித்து மிகக் கருத்தாய் சிந்திப்பீர்கள் என நான் நம்புகிறேன். மேலான அதிகாரத்திற்குப் பெரும்பாலானவர்கள் சிறிதளவே மரியாதை வைத்திருக்கும் இந்தக் கால கட்டத்தில், அரசாங்கத்திற்குக் கீழ்ப்படியாத இந்த நாட்களில், வேதாகமத்தில் தேவன் கீழ்ப்படிதலைக் கட்டளையிட்டிருக்கிறார் என்றும், கீழ்ப்படிந்தவர்களுக்கு அவர் பலனளித்திருக்கிறார் என்றும் வாசிப்பது நமக்கு உற்சாகத்தைக் கொடுக்கிறது. மத உலகில் அநேகர் பிடிவாதமாக இருந்து தாங்கள் விரும்புகிறபடி செய்து, மனுஷருடைய போதனைகளை உயர்த்துகின்ற இந்த நாட்களில், வேத வாக்கியங்களில் தேவனுடைய வார்த்தைகளின்படி செய்வதை வலியுறுத்தியும், பரலோகத்திற்கு அழைத்துச் செல்கின்ற அந்த நேரான, குறுகிய பாதையில் பயணம் செய்வதை வலியுறுத்தியும் வேத வாக்கியங்கள் போதிப்பதைப் பார்க்கும் போது உற்சாகமாக இருக்கிறது.

தேவன் தமக்குக் கீழ்ப்படிந்தவர்களை எப்படி ஆசீர்வதித்தார் என்றும், தமக்குக் கீழ்ப்படியாதவர்களை எப்படி தண்டித்தார் என்பது பற்றியும் படிக்க என்னோடு பரிசுத்த வேதாகமத்திற்கு வாருங்கள். இதை மனதில் கொண்டவராகத்தான் அப்போஸ்தலனாகிய பவுல் இப்படிச் சொன்னார். “*ஆகையால், தேவனுடைய தயவையும், கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார்; அந்தத் தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவு கிடைக்கும்; நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டு போவாய்* ” (ரோமர் 11:22).

முதலாவது, கர்த்தருக்குக் கீழ்ப்படிந்த சில உதாரணங்கள் பற்றி நாம் கவனிப்போம். பழைய ஏற்பாட்டில் கீழ்ப்படிதலுக்கு ஒரு மிகச் சிறந்த உதாரணம் நோவா தான். இந்த உலகத்திலிருந்த துன்மார்க்கரை அழிக்கும்படி தேவன் ஜலப் பிரளயத்தை அனுப்பியபோது தன்னையும், தன் குடும்பத்தில் உள்ளவர்களையும் இரட்சிப்பதற்கு நோவா ஒரு பேழையை உண்டு பண்ணினார். “*மனுஷருடைய அக்கிரமம் பூமியிலே*

*பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்ற மெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக கர்த்தர் மனஸ்தாபப் பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது. அப்பொழுது கர்த்தர்; நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின் மேல் வைக்காமல், மனுஷன் முதற் கொண்டு, மிருகங்கள், ஊரும் பிராணிகள், ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிறவைகளை நிக்கிரகம் பண்ணுவேன்; நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது என்றார். நோவாவுக்கோ கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது"* (ஆதி. 6:5-8). துன்மார்க்கரை அழிக்க ஜலப்பிரளயத்தை அனுப்ப, தான் உத்தேசித்திருந்ததை நோவாவுக்கு தேவன் எப்படி வெளிப்படுத்தினார் என்று வேதவசனம் தொடர்ந்து சொல்கிறதை நாம் வாசிக்க முடியும். அதே நேரத்தில், தேவன், நோவா, நோவாவின் மனைவி, அவர்களுடைய மூன்று குமாரர்கள், அவர்களுடைய மனைவிகள், மற்றும் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையிலான மிருகங்கள் அந்த ஜலப்பிரளயத்திலிருந்து காப்பாற்றும்படியாக எல்லாத் திட்டங்களையும் கொடுத்து ஒரு பேழையை உண்டு பண்ணும்படி தேவன் நோவாவுக்கு கட்டளையிட்டார். வேத வசனத்தை நாம் தொடர்ந்து வாசிக்கையில், "*நோவா அப்படியே செய்தான்; தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான்*" (ஆதி. 6:22) என்றுள்ளது. அதன் விளைவாக, நோவாவும் அந்தப் பேழை யிலிருந்த எல்லோரும் ஜலப்பிரளயத்திலிருந்து காப்பாற் றப்பட்டார்கள். ஆனால், எல்லா துன்மார்க்கரும், கீழ்ப்படியாதவர்களும் ஜலப் பிரளயத் தினால் அழிக்கப்பட்டார்கள்.

கீழ்ப்படிந்தபோது தேவனுடைய ஆசீர்வாதங்கள் பின் தொடர்ந்தன என்று காட்டுவதற்கு எண்ணற்ற உதாரணங்களை மேற்கோள் காட்ட முடியும். அதுபோலவே, தேவனுக்குக் கீழ்ப்படியாதவர்கள் தேவனால் எப்படித் தண்டிக்கப்பட்டார்கள் என்பதற்கும் அநேக உதாரணங்கள் உண்டு. ஆதாம், ஏவாள் சம்பவத்தை நினைத்துக் கொள்ளுங்கள். சர்ப்பத் திற்கு செவி கொடுத்து, தடைசெய்யப்பட்ட கனியைப் புசித்து தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனார்கள். அதன் விளைவாக அவர்கள் ஆவிக்குரிய பிரகாரமாக மரித்தார்கள். அதுமட்டுமல்ல, சரீரப்பிரகாரமாக வேறு வழி களில் அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள், இதனால் சரீர மரணம் அவர் களுக்கும், மனித இனம் முழுமைக்கும் வந்தது (ஆதி. 3). I சாமுவேல் 15 ஆம் அதிகாரத்தில், சாமுவேல் மூலமாக சவுலுக்கு தேவன் தம்முடைய ஜனங்களுக்கு சத்துருக்களாயிருந்த அமலேக்கியர்களை அழிக்கும்படி கட்டளையிட்டார். சவுல் தன் சேனையைத் திரட்டிக் கொண்டு கர்த்தரு டைய சொல்லுக்குக் கீழ்ப்படிந்து போனான். ஆனால், அமலேக்கின் ராஜாவாகிய ஆகாகைத் தப்புவித்தான். சவுலும், ஜனங்களும் ஆகாகையும், ஆடுமாடுகளில் முதல் தரமானவைகளையும்,

இரண்டாந்தரமானவைகளையும், ஆட்டுக்குட்டிகளையும் நலமான எல்லா வற்றையும் அழித்துப் போட மனதில்லாமல் தப்ப வைத்து, அற்பமானவை களும், உதவாதவைகளுமான சகல வஸ்துகளையும் முற்றிலும் அழித்துப் போட்டான் (I சாமுவேல் 15:9). பின்பு அவர்கள் திரும்பிப் போனார்கள், "*சாமுவேல் சவுலினிடத்தில் போனான்; சவுல் அவனை நோக்கி; நீர் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்; கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன் என்றான். அதற்குச் சாமுவேல் அப்படியானால் என் காதுகளில் விழுகிற ஆடுகளின் சத்தமும் எனக்குக் கேட்கிற மாடுகளின் சத்தமும் என்ன என்றான்*". அதற்குச் சவுல், ஜனங்கள் ஆடு மாடுகளில் நலமானவைகளை; உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும் படிக்குத் தப்ப வைத்தார்கள் மற்றவைகளை முற்றிலும் அழித்துப் போட்டோம் (I சாமுவேல் 15:13,14) என்று தன் தவறுக்கு சவுல் விளக்க மளித்தான். தொடர்ந்த விவாதத்திற்குப் பிறகு நாம் இப்படியாக வாசிக் கிறோம் "*அதற்குச் சாமுவேல் கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப் படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும், பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்*" என்றான். (I சாமுவேல் 15:22). அதன் பின்பு, தான் பாவம் செய்ததை சவுல் ஒத்துக்கொண்டான். ஆனால், காலம் கடந்து விட்டது. சவுலின் கீழ்ப் படியாமையின் விளைவாக இஸ்ரவேலின் ராஜாவாக இராதபடி கர்த்தரால் புறக்கணிக்கப்பட்டான். கர்த்தருக்குக் கீழ்ப்படிவது அவனுக்கு மிகவும் எளிதாக இருந்தது. ஆனால், அவன் கீழ்ப்படியவில்லை என்பது மிகவும் துக்ககரமானது.

ஜனங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படியாத போது அதன் விளைவுகளை அனுபவித்தே ஆக வேண்டும். நாம் செய்து கொண்டிருக்கிறது போலவே, பவுல் பழைய ஏற்பாட்டிற்குச் சென்று அந்நாட்களில் தேவன் தம்முடைய ஜனங்களோடு எப்படி இடைப்பட்டார் என்பது பற்றிய சில உதாரணங் களைத் தருகிறார். "*தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையி னாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக் கிறது*" (ரோமர் 15:4). நிச்சயமாகவே, நாம் இது போன்ற பழைய ஏற்பாட்டு சம்பவங்களிலிருந்து விலையேறப்பெற்ற பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

நாம் கிறிஸ்துவைப் பற்றி இப்படியாக வாசிக்கிறோம். "*அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு, தாம் பூரணரான பின்பு தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி*" (எபி. 5:8,9) என்று. ஆகையால்,

கிறிஸ்து எல்லாக் காரியங்களிலும் தேவனுக்குக் கீழ்ப்படிந்தது போலவே, நாமும் கீழ்ப்படிய வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய புத்தகங்களில் இடம் பெற்றிருக்கிற கிறிஸ்துவின் ஜீவியம் முழுவதும் பார்த்தால், அவர் எப்போதும் தம்மைப் பின்பற்றுபவர்கள் கீழ்ப்படிய வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார். இது, தம்மைப் பின்பற்றுபவர்களுடைய தாழ்மை, நேர்மை போன்ற வற்றைச் சோதிக்கும் வழியாக இருந்தது. கர்த்தருக்குக் கீழ்ப்படியாதவர் களை அவர் ஆசீர்வதித்ததாக எந்த ஒரு உதாரணத்தையும் நாம் பார்க்க முடியாது.

*கிறிஸ்து இப்படியாகச் சொன்னார். பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பா னேயல்லாமல் என்னை நோக்கி; கர்த்தாவே! கர்த்தாவே என்று சொல்லு கிறவன் அதில் பிரவேசிப்பதில்லை* " (மத்தேயு 7:21). அவர் மறுபடியும் சொல்லும் போது, " *ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்* " (மத்தேயு 7:24). யாக்கோபு இப்படியாகச் சொன்னார், "*அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதன்படி செய்கிறவர்களாயும் இருங்கள்*" (யாக்கோபு 1:22). I பேதுரு 1:22-ல் பேதுரு, நாம் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்ததினாலே ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டதாகக் கூறுகிறார். பவுல் சொல்லும் போது, நாம் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியத் தவறினால் நம்மீது ஆக்கினைத் தீர்ப்பைச் செலுத்தும்படிக்கு கர்த்தர் வருவார் (II தெச. 1:7-9). *நாம் அவருடைய கற்பனைகளின்படி செய்து, மரண பரியந்தம் உண்மை யுள்ளவர்களாயிருந்தால் நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வோம் என்று கிறிஸ்து வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்* (வெளி 22:14, 2:10).

ஜனங்கள் இழந்து போவதற்குக் காரணம் அவர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிவதைத் தெரிந்து கொள்ளாமல் இருப்பது தான். மனிதன் தன்னைத் தானே இரட்சிக்க முடியாது. அல்லது மத சம்மந்தமாக தன் விருப்பப்படி காரியங்களைச் செய்வதினால் இரட்சிக்கப்பட முடியாது. ஒருவரால், தான் விரும்புகின்றதை விசுவாசிக்க முடியும், ஒருவரால் மனிதனால் உண்டாக்கப்பட்ட சபைகளில் அங்கத்தினராக இருக்க முடியும், மனிதர்களின் பெயர்களைத் தெரிந்து கொண்டு தேவனைத் தன் விருப்பத்தின்படி ஆராதிக்க முடியும், ஆனால், அவர் இரட்சிக்கப்பட்டு பரலோகத்திற்குப் போக முடியாது. ஒருவர் இரட்சிக்கபடவேண்டுமெனில் கர்த்தர் என்ன செய்யும்படி விரும்புகிறாரோ அதைச் செய்ய வேண்டும். அதற்கு விதிவிலக்கு இல்லை.

பெண்கள் பகுதி

# பாவிகளாகிய நம்மேல் தேவனின் அன்பு

**Sis. R. R. NAYAGAM**

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேவன் வானத்தையும், பூமியையும் அதிலுள்ள யாவையும் சிருஷ்டித்து நல்லதென்று கண்டார். ஆறாம் நாளிலே சிருஷ்டிப்பை சிருஷ்டித்து அவர்கள் எப்போதும் தன்னோடிருக்க விரும்பி அவர்களோடு உலவி வந்தார். அவர்களுக்கு ஒரு நிபந்தனையைக் கொடுத்து (ஆதி. 2:16,17) அதன்படி செய்யச் சொன்னார். ஆனால், ஸ்திரியானவளோ தந்திரமான சர்பத்தின் வார்த்தைக்குக் கீழ்படிந்து தேவ கட்டளையை மீறினாள். எனவே, வீழ்ச்சி அங்கே வந்தது. (ஆதி. 3). தேவ கட்டளையை மீறினவுடனே பயமும், வெட்கமும் அவர்களைக் கவ்விக்கொண்டது. தங்களை மறைத்துக் கொள்வதற்காக அத்தி இலைகளைத் தைத்து தங்களுக்கு அரைக் கச்சைகளை உண்டு பண்ணினார்கள். பிறகு பாவிகளான அத்தம்பதி யினருக்கு நியாயத்தைத் தீர்ப்பு செய்தார். கஷ்டங்களும் வேதனைகளும் நிறைந்த ஒன்றாக அந்தத் தீர்ப்பு இருந்தது. பிறகு அவர் ஒரு பெரிய வாக்குத்தத்தத்தைக் கொடுக்கிறார். அது தான் மீட்பின் திட்டத்திற்கான அடித்தளம் (ஆதி. 3:15). உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார். குறிப்பாக சாத்தானைப் பற்றிப் பேசுகிறார். மேலும், ஸ்திரியின் வித்து சாத்தானை மேற்கொள்ளும் என்று முன்னறிவிக்கிறார். அதன் பிறகு தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார். (3:21). அத்தி இலைகள் காய்ந்து உதிர்ந்து விடும், பிறகு என்ன செய்வது என்ற சிந்தன ஆதாமுக்கும், ஏவாளுக்கும் இல்லை. மனிதர்களாகிய நம்முடைய தெரிந்து கொள்ளுதல்கள் அனைத்துமே அரைகுறையாக, தற்காலிகமாகத்தான் இருந்துவருகிறது. தேவன் நமக்குக் கொடுத்ததும், கொடுப்பதும், கொடுக்கப்போகிறதும் எப்போதுமே மிகச் சிறந்த ஒன்றாகத்தான் இருக்கும். பல வேளைகளில் நம்முடைய அறிவுக்கு முக்கியத்துவம் கொடுத்து தேவ சித்தத்தைத் தெரிந்துகொள்ள நாம் விரும்புவதில்லை. ஆதாம், ஏவாள் பாவத்தின் விளைவாக ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். அதோடு ஜீவ விருட்சத்துக்குப் போகும் வழியும் தேவனால் அடைக்கப்பட்டது.

ஆதி. 2:16,17 வசனங்களில் " ..... நீ இதைப் புசிக்கும் நாளில் சாகவே சாவாய் " என்று கட்டளையிட்டார். ஆனால், இக்கட்டளை மீறப் பட்டு பாவம் வந்து, சாபமும் வந்து, ஆத்தும மரணமும் நிகழ்ந்து விட்டது. ஆனால், ஆதி. 3:21 ல் தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார் என்று வாசிக்கிறோம். இந்த வசனத்தில் தேவனுடைய நித்திய நோக்கம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனின், மீட்பின் திட்டத்திற்கு அடித் தளமாக இந்த வசனம் இருக்கிறது. பழைய ஏற்பாட்டில் பாவ நிவிர்த்திக் காகச் செய்யப்பட்ட தியாகங்களுக்கும் இது அடிப்படையாக உள்ளது. மேலும் ஆதி. 3ம் அதிகாரத்தில் சுவிசேஷமே அடங்கிவிட்டது. தேவனுடைய இரட்சிப்பின் திட்டமானது ஆச்சரியமானது, அவருடைய கிருபை மகத்தானது, அவருடைய இரக்கம் முடிவில்லாதது.

ஆதி. 3ம் அதிகாரம் இருண்ட மேகமும், பெரிய சூறாவளியையும் கொண்ட ஓர் அதிகாரம். இருள் கவ்விக் கொண்ட சம்பவங்கள். ஆனாலும் அங்கே தேவனுடைய கிருபையையும் கட்டாயம் காண்கிறோம். இருட்டான சூழ்நிலைக்கு மனிதன் தான் காரணம் தேவன் அல்ல. பாவஞ் செய்த ஆதாமும், ஏவாளும் பயந்தார்கள், வெட்கப்பட்டார்கள். தங்கள் நிர்வணத்தை மூட முயற்சித்தார்கள், தேவனிடத்திலிருந்தும் தங்களை மறைத்துக் கொள்ள முயற்சித்தார்கள்.

பாவம் செய்துவிட்டார்கள் என்பதையறிந்த தேவன் எவ்விதமாக அவர்களிடம் வந்தார். வழக்கமாக வருவதுபோலவே வந்தார். பகலில் குளிர்ச்சியான வேளையிலே உலாவுவாரே அதேவிதமாக வந்தார். கோபத்திலே ஓடி வரவில்லை. உடனே அவர்கள் செத்துப்போகும்படியாக அவர்களைத் தாக்கவில்லை. மாறாக ஆதி. 3ம் அதிகாரத்தில் மனிதனிடத்தில் தேவன் கேட்ட முதல் கேள்வி நீ எங்கே இருக்கிறாய்? தேவனுக்குத் தெரியும் ஆதாம் எங்கேயிருக்கிறான் என்று, ஆனால் தேவன் செல்ல முடியாத இடத்திலே ஆதாம் இருந்தான். தேவன் பரிசுத்தர். தீமையை பார்க்கமாட்டாத சுத்தக் கண்ணர் (ஆதி. 1:13). உண்மை யென்னவென்று தேவனுக்குத் தெரியும் அவர்கள் எங்கேயிருந்தார்கள் என்று. ஆனால், அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை அவர்கள் பார்க்கவேண்டும் என்று தேவன் விரும்பினார். கிறிஸ்தவத்தைத் தவிர பிற மதங்களிலே மக்கள் தான் தேவனைத் தேடிச் செல்வார்கள் (1 ராஜா: 18:20-30). வேதாகமம் சொல்கிற மார்க்கம் முற்றிலும் வித்தியாசமானது. தேவன் மனிதனைத் தேடி வருகிறார். மனிதனின் கவனம் தன்வசம் திரும்ப வேண்டுமென்று தேவன் முயற்சிக்கிறார். காணாமற்போன தன் பிள்ளைகளைத் தேவன் தேடிக்கொண்டேயிருக்கிறார். ஏதேன் தோட்டத்தில் தொலைத்த தன் பிள்ளைகளைத் தேடினார். தன் கிருபையின் மூலம் இழந்து போனவர்களைத் தேடும் பணியைத் தேவன்

தொடர்ந்து செய்து கொண்டேயிருக்கிறார். வேதாகமம் முழுவதும் தேடும் போது தேவன் இழந்துபோனவர்களைத் தேடிக்கொண்டேயிருக் கிறார் என்ற உண்மை விளங்கும். இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார் (லூக்கா 19:10). ஒருவரும் கெட்டுப் போவது தேவ சித்தம் அல்ல.(2 பேதுரு 3:9).

ஆதி. 3 :21ல் தேவன் அவர்களுக்குத் தோல் உடைகளை உண்டு பண்ணினார் என்று பார்த்தோம். உடைகளுக்கான தோலைத் தேவன் எங்கிருந்து பெற்றார்? வேதத்தில் குறிப்பிட்டு எதுவும் சொல்லப்பட வில்லை. ஆனால், ஏதோ ஒரு மிருகத்தின் இரத்தம் சிந்தப்பட்டிருக்கிறது என்பது சிந்திக்கத்தக்கதாயிருக்கிறது. அப்படித்தான் ஒரு மிருகம் தன் தோலை கொடுத்திருக்க முடியும். பாவத்தினால் உண்டான வெட்கத்தை மூட அங்கே தோட்டத்தில் ஒரு மிருகம் பலியாக வேண்டியிருந்தது. மனிதனின் பாவத்தினை மூட குற்றமில்லாத ஒரு இரத்தத்தை தேவன் சிந்த வேண்டியதாயிற்று. தேவன், ஏதோ ஒரு மிருகத்தின் இரத்தத்தைச் சிந்தி தங்கள் பாவ வெட்கத்தை மூடினார் என்று ஆதாமும், ஏவாளும் அறிந்தார்கள். தேவன், தங்கள் பாவத்தை மூடுவதற்கு ஏதோ ஒன்றைக் கொடுத்தார் என்று உணர்ந்தனர். இதுதான் மீட்பின் திட்டம், கிருபையின் சரித்திரம். ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு எருசலேமுக்கு வெளியே ஒரு மலையின்மேல் தேவன் உண்மையான, நிரந்தரமான ஒரு போர்வையைப் பாவத்தினால் உண்டான வெட்கத்தை மூடுவதற்குக் கிருபையாய் அருளினார். இந்த நற்செய்தி ஆதியாகமம் 3 ம் அதிகாரத்தில் உள்ளது. பாவத்தை மூடுவதற்காகவே முதல் மரணம் உலகத்தில் நடந்தேறியது. தேவனுடைய தியாகத்தை ஒருவன் ஏற்றுக்கொள்ள வேண்டுமானால் அடிப்படை அவசியம் விசுவாசம். விசுவாசம் மட்டுமே தேவனுடைய அன்பு, கிருபை, இரக்கம் இவைகளை ஏற்றுக்கொள்ள வைக்கும். தேவன் மேல் நம்பிக்கையாயிருந்த யூதர்களிடம் பேதுரு, மனந்திரும்பி பாவ மன்னிப்புக்கென்று இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் (அப். 2:38) என்று பிரசங்கித்தான்.

ஆதாமும், ஏவாளும் எப்படி தேவன் கொடுத்த தோல் உடையை ஏற்றுக்கொண்டார்கள்? தேவனுக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தினார்கள். தாங்கள் உண்டுபண்ணின அத்தி இலைகளால் தயாரிக்கப் பட்ட உடைகளைக் கழற்றிப் போட்டு தேவனால் கொடுக்கப்பட்ட தோல் உடைகளை ஏற்றுக்கொண்டார்கள். ஆதி. 3:15-ல் தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தை விசுவாசித்தார்கள். ஆதாமும் ஏவாளும் ஜீவ விருட்சத்தை இழந்தார்கள். ஆனால், தேவனோடு தான் தோட்டத்தை விட்டு வெளியே சென்றனர். இப்போது தேவனோடு ஒரு புதிய உறவு. அந்த உறவு இரத்தம் சிந்துதலினால் உண்டான (தியாக) உறவு.

பிரியமானவர்களே! தேவ திட்டமே நாம் மீண்டும் அந்த ஜீவ விருட்சத்திடம் செல்லவேண்டும் என்பதே. வேதாகமம் இதை அழகாக விளக்குகிறது. " ....ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்குத் தேவ னுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன் " என்றெழுது (வெளி. 2:7; வெளி. 22:2,3,14) ஆகிய வசனங் களிலும் நாம் இதைக் காணலாம். விசுவாசத்தினாலே அவருடைய கிருபைக்குக் கீழ்ப்படியும்போது நித்திய வாழ்வுக்கான அங்கீகாரம் நமக்கு நிச்சயம் கிடைக்கும். (தீத்து 1:2,3; 1 யோவான் 2:25, 5:11-13). ஜீவ விருட்சத்தை நாம் பெற்றுக்கொள்ள முடியும். அது இருக்கும் இடத்தில் பாவம் இல்லை, மரணம் இல்லை, வேதனை, வலி இல்லை, கண்ணீரும் இல்லை. ஆதி. 3:15-ல் கொடுத்த வாக்குத்தத்தம் தான் தேவனுடைய விருப்பம். அது காலங்காலமாய் தேவனால் செயல்பட்டுக் கொண்டே வருகிறது. மீண்டும் நம்மை அவரோடு சேர்த்துக் கொள்வதுதான் அவருடைய ஆவல்.

ஜீவ விருட்சத்தைப் பார்போம். குற்றமற்றவர்களாக, சந்தோஷமான வர்களாக, பாதுகாப்பான இடத்தில் அவரோடு ஐக்கியமாயிருப்போம். ஆம் ஆதி. 3ம் அதிகாரம் நற்செய்தியின் அதிகாரம். தேவன் மீட்கிறார், தேவன் தம் தியாகத்தினால் பாவத்தைக் கழுவுகிறார். நம்முடைய கடனைத் தேவன் அடைக்கிறார்.

தோட்டத்திலே சிலுவை! ஆம் காலம் நிறைவேறியபோது கொல்கதா மலையிலே நாட்டப்பட்ட சிலுவை தேவனுடைய ஆதினத்தி லேயே ஏதேன் தோட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டு விட்டது. செல்லமுடியாத இடத்திற்குத் தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனையே மனித மீட்புக்காக அனுப்பி தன் கிருபையை விளங்கச் செய்தார். நாம் சுயமாக இரட்சிக்கப்படமுடியாது. தேவ குமாரனாகிய இயேசுவின் இரத்தத்திற குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டாலேயொழிய நம்மை நாமே இரட்சித்துக் கொள்ளமுடியாது. ஆம், தேவன் தாம் செல்ல முடியாத இடத்திற்கு நம்மைத் தேடி வந்தார்.

அருமையானவர்களே, எவ்வளவு பெரிய தேவ அன்பு இது. சுய நலமில்லாத அன்பு. தம்முடைய பரிசுத்த குமாரனை பாவ இடத்திற்கு வரச் செய்து, வாழச் செய்து, மரிக்கச் செய்து, அதுவும் சிலுவையிலே மரிக்கச் செய்து உயிர்த்தெழ வைத்து, பரிசுத்த ஆவியினால் வசனங்களை எழுதிக் கொடுத்து இப்படியெல்லாம் நம்மேல் அன்பு செய்யும் நபர் இந்த உலகில் நமக்கு யாராவது இருக்கிறார்களா? இல்லவே இல்லை. உண்மையான அக்கறையான, கரிசனையான, பாதுகாப்பான, என்றும் மாறாத தேவ அன்புக்கு ஈடு இணை என்று எதுவுமே இல்லை. காலங்காலமாய் நம்மையே நினைத்துக் கொண்டிருக்கும் தேவாதி தேவனின் அன்புக்கு நன்றியாக நாம் செய்ய வேண்டியதைச் செய்வோம் வேதத்தின் துணை கொண்டு. ஆமென்!.

❋

வாலிபர் பகுதி

# தேவ உறவில் ஞானம்

Bro. பென்னி மார்ட்டின்

பிரியமான வாலிப உள்ளங்களே உங்கள் யாவருக்கும் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நல் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் யாவரையும் மீண்டுமாக இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அருமையானவர்களே! நம் குடும்ப உறவில் விரிசல் ஏற்படாமலிருக்க ஞானமாக நடந்து கொள்கிறோம் அல்லது ஞானமாக நடந்து கொள்ள முயற்சிக்கிறோம். குடும்ப அங்கத்தினர்களின் அபிலாஷைகளை முடிந்த வரை பூர்த்தி செய்து உறவில் விரிசல் ஏற்படாதபடி பார்த்துக் கொள்கிறோம். ஆனால், தேவனோடு நாம் கொண்டிருக்கும் உறவு எப்படி இருக்கிறது? அதில் விரிசல் ஏற்படுவதைக் குறித்து நாம் அக்கறைப்படுகிறோமா? இன்றைய நாட்களில் உலகெங்கிலும் மனித உறவுகளில் ஏற்படும் முறிவும் பிரிவும் பலரை நிராசையில் நிலைகுலையச் செய்கிறது. பல வாலிபர்கள் வயது கோளாறால் இவ்வுலக உறவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பின்பு அவ்வுறவில் ஏற்படும் விரிசலால் வாழ்க்கையே கசந்து விட்டது என்று கண்கலங்குவதை சமூகத்தில் நாம் காண்கிறோம். அன்பானவர்களே! இவ்வுலக உறவுகளெல்லாம் இவ்வுலகத்தோடு முடிந்துவிடுகிறபடியால் நித்திய நித்திய காலமாக நாம் வாழப்போகும் பரலோகில் வாசம் செய்யும் தேவனோடு நாம் கொண்டிருக்கும் உறவில் எப்படி ஞானமாக நடந்து கொள்ள வேண்டுமென்று நீதிமொழிகள் புத்தகத்திலிருந்து காரியங்களைக் கற்றுக் கொள்வோம்.

**1. உண்மையான ஞானம் தேவ பயத்தின் அவசியத்தை நமக்கு உணர்த்துகிறது**

கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் என்று நீதி மொழிகள் 1:7-ல் நாம் வாசிக்கிறோம். கர்த்தருக்குப் பயப்படும் பயம் ஆயுசு நாட்களைப் பெருகப் பண்ணும். ஏனென்றால், ஒருவர் கர்த்தருக்குப் பயப் படும்போது தீமையை விட்டு விலகுவார். அவர் நன்மையைத்தேடி, சமாதானத்தைத் தேடிப்போகும்போது நன்மையான ஈவுகள் பரத்தி லிருந்து இறக்கி வரும். இன்று உலகில் பல வாலிபர்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எதையெல்லாம் செய்கிறார்கள். ஆனால், உண்மையாகவே கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் மாத்திரமே ஒருவரு டைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும். நீதிமொழிகள் 14:26-ல் கர்த்த ருக்குப் பயப்படுறவனுக்குத் திட நம்பிக்கை உண்டு என்று பார்க்கிறோம். நம் வாழ்க்கை கர்த்தரால் நடத்தப்பட்டால் எதிர்காலத்தைக் குறித்த பயம் நமக்கு இருக்காது. வாழ்க்கை என்பது தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்ட

ஈவாக இருக்கிறது. அதை நாம் அதன் முழுமையான அளவில் வாழ வேண்டும். எனவே, நாம் கர்த்தருக்குப் பயந்தால் நம் ஆயுசு நாட்களும் பெருகும், நம் வாழ்க்கைத் தரமும் உயரும். நீதிமொழிகள் புத்தகம் தேவ னோடு நாம் கொண்டிருக்கும் உறவில் தேவ பயத்தின் மதிப்பை நமக்கு கற்றுத் தருகிறது.

**2. உண்மையான ஞானம் தேவனுக்கு அருவருப்பானவைகளை நமக்கு உணர்த்துகிறது**

கர்த்தருக்கு அருவருப்பான ஏழு காரியங்கள் நீதிமொழிகள் 6:16-19 வசனங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. நாம் அவைகளைக் குறித்து வைத்துக் கொண்டு, எப்படி வாழவேண்டுமென்பதை நடைமுறைப்படுத்த வேண்டும். பெரும்பாலான வாலிபர்கள் தங்கள் நண்பர்களுக்குப் பிரியமாக நடந்து கொள்ளும்போது தேவனுக்கு பகைஞர்களாகிறார்கள். உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்கு சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவ னுக்குப் பகைஞனாகிறான் (யாக்கோபு 4:4). நாம் யாருக்குப் பிரியமாக வாழ வேண்டும் என்பதை முதலில் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். பிரியமானவர்களே! நாம் இவ்வுலகில் யாரைப் பிரியப்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறோம்? நாம் தேவனைப் பிரியப்படுத்தாமல் படிக்கின்ற இடங்களில், வேலை ஸ்தலங்களில், குடும்பங்களில், நம்மோடு இருப்பவர் களைப் பிரியப்படுத்தினால் ஒருவேளை சில நன்மைகள் ஏற்படலாம். ஆனால், அது நிலைத்து நிற்காது. நிலையற்ற இவ்வுலகில் சில நிமிட நிம்மதிக்காக இவ்வுலகத்தாரை நாம் திருப்திப்படுத்தும் போது தேவனுக்குப் பகைஞர்களாக மாறி விடுகிறோம். நாம் இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவனுடைய நன்மையும் பிரியமும், பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, நம் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாக வேண்டும் என்று பவுல் புத்திமதி சொல்கிறார் (ரோமர் 12:2). அருமையானவர்களே நாம் தேவனுக்குப் பிரியமாக நடக்க வேண்டு மென்றால், அவருக்கு அருவருப்பானவைகளை நாமும் அருவருக்க வேண்டும்.

**3. உண்மையான ஞானம் நாம் சகமனிதர்களோடு சரியான உறவை வைத்துக்கொள்ள நமக்கு உணர்த்துகிறது**


கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருக்கவேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் அறிவுறுத்துகிறார். தேவனால் நாம் பல காரியங்களில் ஆசீர்வதிக்கப்பட்டி ருக்கிறோம், அவரால் பல நன்மைகள் நமக்கு உண்டாயிருக்கிறது நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந் துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது என்று யாக்கோபு 1:17 ல் வாசிக்கிறோம். தேவனால் எனக்கு எந்த நன்மையுமே ஏற்படவில்லை என்று யாருமே சொல்ல முடியாது. அப்படியிருக்கும்போது தேவையில் இருப்பவர்களோடு நாம் எப்படி நடந்து கொள்ளுகிறோம் அல்லது அவர்களை நாம் எப்படி நடத்துகிறோம் என்பது நமக்கும் தேவனுக்கும் உள்ள உறவில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஏழையைப்

பரியாசம் பண்ணுகிறவன் அவனை உண்டாக்கினவரை நிந்திக்கிறான் என்று நீதி. 17:5 நம்மை எச்சரிக்கிறது. நம் சத்துருக்களைக்கூட சிநேகிக்க வேண்டுமென்று வேதம் நமக்கு அறிவுறுத்துகிறது (மத்தேயு 5:44). உன் சத்துரு விழும் போது சந்தோஷப்படாதே; அவன் இடறும் போது உன் இருதயம் களி கூராதிருப்பதாக (நீதி. 24:17).

பிரியமான வாலிபக்கண்மணிகளே! " நாம் ஞானமற்றவர்ளைப் போல நடவாமல் ஞானமுள்ளவர்களைப் போல கவனமாய் நடந்துகொள்ள வேண்டுமென்று " எபேசியர் 5:15-ல் வாசிக்கிறோம். நாம் உலகப் பிரகார மான காரியங்களில் ஞானமாக நடந்து கொள்வது அவசியமாக இருந் தாலும் கூட, தேவனுக்கும் நமக்கும் உள்ள உறவில் விரிசல் ஏற்படாதபடி ஞானமாக நடந்து கொள்ள வேண்டுமென்றால், தேவ பயத்தோடு தீமையை விட்டு விலகி அவருக்குப் பிரியமானவைகளைச் செய்ய வேண்டும். தேவன் அருவருக்கிற காரியங்களை நாமும் அருவருத்து அதிலிருந்து விலகியோட வேண்டும். நாம் மற்றவர்களோடு தவறான உறவை வைத்துக் கொண்டு தேவனோடு சரியான உறவை வைத்துக் கொள்ள முடியாது என்பதை உணர்ந்து செயல்படவேண்டும். அப்படிச் செய்தால் நமக்கான வாக்குதத்தம் நீதிமொழிகள் 6:20-ல் கொடுக்கப் பட்டிருக்கிறது. விவேகத்துடன் காரியத்தை நடப்பிக்கிறவன் நன்மை பெறுவான். எனவே, நாம் விகேத்துடன் தேவ காரியங்களை நடப்பிப் போம் தேவனிடத்திலிருந்து நன்மைகளைப் பெறுவோம். தேவ சமாதானம் இன்றும் என்றும் என்றென்றும் சதாகாலங்களிலும் உங்களோடிருப்பதாக ! ஆமென் !!.

## நாளும் நடப்பும்

1. தமிழகத்தில் பால், தயிர் விலை உயர்த்தப்பட்டுள்ளது
2. சத்தீஸ்கர் மாநிலத்தில் குடும்ப நல அறுவைச் சிகிச்சையில் 13 பெண்கள் சாவு
3. எபோலா நோய் : பலி எண்ணி 5 ஆயிரத்தைக் கடந்தது
4. வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியுள்ளதால் மீண்டும் தொடர் மழை
5. நட்டத்தில் செயல்படும் பொதுத்துறை நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படும். – மத்திய நிதி அமைச்சர்
6. ஜாதி வாரி கணக்கெடுப்பு நடத்துவது சட்ட விரோதமானது – உச்ச நீதிமன்றம் தீர்ப்பு.
7. இலங்கைக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரை இந்திய கைப்பற்றியது. ரோஹித் சர்மா இரண்டு முறை இரட்டைச் சதம் அடித்து உலக சாதனை.




# இயற்கையிடமிருந்து...

எனக்குப் பிரியமான சிறு குழந்தைகளே ! உங்கள் யாவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். அனைவரும் எப்படி இருக்கிறீர்கள்? இடைப்பருவத் தேர்வு முடிந்து, அரையாண்டுத் தேர்வுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறீர்களா? சரி, வாருங்கள் இந்த மாதத்திற்கான பாடம் என்னவென்று பார்ப்போம்.

பிள்ளைகளே, இந்த மாதம் நாம் இயற்கையினிடமிருந்து சில பாடங்களைக் கற்றுக்கொள்வோம். உங்கள் அனைவருக்கும் தெரியும். ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி, ஆறு நாட்களில் நாம் காண்கின்ற அனைத்தையும் வார்த்தையின் வல்லமை யினாலே சிருஷ்டித்தார். நாம் காண்கின்ற வானம், மேகம், மலைகள், சூரியன், சந்திரன் இவை யாவும் நம் தேவன் எப்படிப்பட்டவர் என்று நமக்குக் காட்டுகிறது.

சங்கீதம் 19:1-6 வரை வாசியுங்கள், இங்கே சங்கீதக்காரனாகிய தாவீது என்ன சொல்லுகிறார்? வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகல், இரவு, சூரியன் என்று இவை அனைத்தும் தேவனை மகிமைப்படுத்துகின்றன. எப்படியென்றால், அவைகள் நம் தேவனின் வல்லமையை, பராக்கிரமத்தை, ஞானத்தை வெளிப்படுத்துகின்றன.

சங்கீதம் 19:4 ல் அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையு மில்லை என்று கூறுகிறது. அப்படியிருந்தும் அவைகள் தேவனை மகிமைப்படுத்துகின்றன.

பிள்ளைகளே! நீங்களும் நானும் தேவனுடைய சாயலில் உருவாக் கப்பட்டவர்கள். நமக்குப் பேச்சு இருக்கிறது. அப்படியென்றால் நாம் எவ்வளவாய் தேவனை மகிமைப்படுத்த வேண்டும்? எப்படி அவரால் சிருஷ்டிக்கப்பட்டவைகள் அவரை மகிமைப்படுத்துகிறதோ, அதைப்போல நாமும் அவரை மகிமைப்படுத்த வேண்டும்.

சரி, எப்படி சிறுவர்களாகிய நீங்கள் தேவனை மகிமைப்படுத்துவது? நன்றாகப் படித்து, நல்ல மதிப்பெண்களைப் பெறும்போது, வேத அறிவைப் பெருக்கிக் கொள்ளும் பொழுது, நல்ல பழக்கவழக்கங்களைக் கொண்டவர் களாக இருக்கும்பொழுது, பெற்றோருக்குக் கீழ்ப்படியும்பொழுது இப்படியாக ஒவ்வொரு காரியத்திலும் நீங்கள் தேவனை மகிமைப்படுத்த முடியும்.

இந்த சிறுவயதிலிருந்தே நீங்கள் தேவனை மகிமைப்படுத்துவீர்களானால் அது உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும். இயற்கையைப் பார்க்கும் ஒவ்வொரு முறையும் தேவனின் வல்லமையையும், ஞானத்தையும் உணர்ந்து அவரை மகிமைப்படுத்துங்கள். மகிமைப் படுத்துவீர்களா?

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக !

# சர்க்கரை நோய் – உணவு முறை

சர்க்கரை நோய்க்கு (Diabetes Mellitus) இன்றியமையாதது உணவுக் கட்டுப்பாடு. நாம் உண்ணும் உணவில் இருக்கும் கலோரியின் அளவைத் தெரிந்து கொண்டு அதற்கேற்ப உண்பது நல்லது.

சர்க்கரை வியாதி உள்ளவர்கள் நாள் ஒன்றுக்கு 1600–1800 kcal உணவு மட்டுமே சாப்பிடவேண்டும். kcal என்பது உணவுப்பொருள் உற்பத்தி செய்யும் சக்தி ஆகும். காலை தொடங்கி இரவு வரை 1600–1800 kcal அளவையே சாப்பிடவேண்டும்.

நாம் அடிக்கடி பயன்படுத்தும் உணவையும், அவை கொடுக்கும் கலோரியையும் கீழே பட்டியலிட்டிருக்கிறேன். அதற்கேற்றாற்போல் சாப்பிட்டு வருவது நல்லது.

- கீழே குறிப்பிட்டுள்ளவைகள் ஒவ்வொன்றும் 80kcal கொடுக்கக் கூடியவை:– (ஒரு வேளைக்கு)

| உணவு வகை | பழவகை | பால் / பால் சார்ந்த உணவு |
|---|---|---|
| ஒரு சப்பாத்தி | 2 பேரீட்சை பழம் | 1 கப் பசும் பால் |
| ஒரு கப் சாதம் | $1/2$ வாழைப்பழம் | $1/2$ கப் எருமை பால் |
| ஒரு இட்லி | 1 ஆப்பிள் | 1 கப் தயிர் |
| இரண்டு பிரட் | 1 ஆரஞ்சு | 2 கப் மோர் |
| பிஸ்கட் 4–6 | திராட்சை 25 | சர்க்கரை இல்லாத |
| பருப்பு $1/2$ கப் | | காபி / டீ 40 kcal |
| 1 தோசை | 1 கொய்யா | |

- காய்கறிகளை ஒரு வேளை உணவுக்கு 200 கிராம் எடுத்துக் கொள்ள வேண்டும். (200 கிராம் என்பது சமைபதற்கு முன் இருக்கும் எடை)
- அதைப்போல சமைத்த தானிய வகைகளை $1/2$-$3/4$ கப் வரை சாப்பிடுவது 80–100kcal க்கு சமமாகும்.

இதைத் தெரிந்து கொண்டு, நாள் ஒன்றுக்கு (1600–1800 kcal) அளவை சாப்பிடுவது நோயை கட்டுப்பாட்டில் வைக்க உதவும்.

Dr. ஏபில் நாயகம், CMC வேலூர்.

(தொடரும்)

# நீ ஏன் ஒரு கிறிஸ்தவன்

**Bro. Peggy T. Crump**

**ப**ல ஆண்டுளாக ஊழியஞ் செய்து கொண்டிருக்கும் என்னிடம் பலர் பலவேளைகளில் கேட்கும் ஒரு கேள்வி : நீ ஏன் ஒரு கிறிஸ்தவனாக இருக்கிறாய்? தேவனையும் வேதாகமத்தையும் நேசிக்க என் பெற்றோர்களும், தாத்தா, பாட்டியும் எனக்குக் கற்றுக் கொடுத்திருந்தனர் என்பது என் முதல் எண்ணம் என்ற போதிலும், இந்தப் பதிலை அவர்கள் தேடிக் கொண்டிருக்கவில்லை. இப்படியாக, நான் பல ஆண்டுகளுக்கும் மேலாக தேடிக் கண்டுபிடித்தேன்.

1. நான் ஒரு கிறிஸ்தவன், ஏனென்றால் தேவனை நேசிக்க நான் கற்றுக் கொடுக்கப்பட்டேன். தேவனில் விசுவாசமுள்ளவனாக நான் இருக்கிறேன். தேவன் என்னை நேசித்தபடியால்(யோவான் 3:16) அவருடைய ஒரே குமாரனை எனக்காகத் தந்தார். இந்த குமாரன் என் பாவங்களின் மன்னிப்புக்கென்று தமது இரத்தத்தை சிந்தியபடியால், நான் அவரை நேசிக்கிறேன். ஏனென்றால், முதலில் அவர் என்னை நேசித்தார் (1 யோவான் 4:19).

2. நான் ஒரு கிறிஸ்தவன், ஏனென்றால் இயேசு கிறிஸ்துவின் பேரிலுள்ள என் விசுவாசமானது, அவர் கூறுவதைச் செய்ய எனக்குச் சொல்லுகிறது. இதே விசுவாசம் தான், நான் திருமுழுக்குப் பெற்று அவருடைய சபையில் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்படவும் என்னை வழிநடத்துகிறது. (மாற்கு 16:15-16 அப். 2:47).

3. நான் ஒரு கிறிஸ்தவன்; ஏனென்றால் எல்லாரும் பாவம் செய்து, தேவ மகிமையற்றவர்களாகி என வேதாகமம் எனக்குச் சொல்லுகிறது. (ரோமர் 3:23; 1 யோவான் 1:10). நான் பாவத்தில் நீடிக்க விரும்பவில்லை; எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் இந்த மகத்தான இரட்சிப்பை அலட்சியப் படுத்தினால் (எபிரேயர் 2:4) நித்திய தண்டனையிலிருந்து தப்பிக்க வழி எதுவும் இருக்காது.

4. நான் ஒரு கிறிஸ்தவன்; ஏனென்றால், அது என்னை ஒரு நல்ல மனிதனாக்குகிறது. உலகத்திலிருந்தும் பாவத்திலிருந்தும் அது என்னை ஒதுக்கி வைக்கிறது. (ரோமர் 1:11; யாக். 1:21; யோனான் 6:44-45) தேவனுடைய இராஜ்யத்தைத் தேடு என கிறஸ்து எனக்குச் சொல்லுகிறார். நான் அவருடைய பாதுகாப்பில் இருப்பேன். (மத். 6:33; கலா. 6:7-10; மத். 13:23; மாற்கு 10:29-30).

5. நான் ஒரு கிறிஸ்தவன்; ஏனெனில் நான் அவருடைய பிள்ளையாக இருக்க தேவன் விரும்புகிறார். ஒருவரும் கெட்டுப் போகாமல்

எல்லாரும் மனந்திரும்பி அவருடைய பிள்ளைகளாக இருக்க வேண்டு மென்று அவர் விரும்புகிறார். (2 பேதுரு 3:9)

6. நான் ஒரு கிறிஸ்தவன்; ஏனென்றால் அவருடைய வார்த்தை வழியாக கிறிஸ்து எனக்கு உறுதி அளிக்கிறார். (எபி. 10:22; ரோமர் 10:17;) நித்திய ஜீவன் எனக்காகக் காத்திருப்பதை நான் அறியக்கூடும்; ஏனெனில் கிறிஸ்துவின் இரத்தத்தால் நான் இரட்சிக்கப்பட்டேன். (1 யோவான் 1:7; 2:2). எனது கடந்தகால பாவங்களிலிருந்து என்னை இந்த இரத்தம் விடுவித்துள்ளது. (எபே.1:7) கிறிஸ்துவோடு நடந்து அவருடைய கட்டளை களுக்கு நான் கீழ்ப்படியும் போது, எதிர்காலத்திலும் தொடர்ந்து அது என்னை விடுவிக்கும். (1 யோ. 2:3) கிறிஸ்துவுக்குள் நான் திருமுழுக்குப் பெற்றதால்,நான் கிறிஸ்துவுக்குள் இருக்கிறேன் என நான் அறிவேன். (கலா. 3:26-27; ரோமர் 6:3-4) நான் அறிவதற்கு எந்த ஒரு காட்சி யையோ அல்லது உணர்வையோ சார்ந்திருக்கத் தேவையில்லை. (எபி. 11:1; யோவான் 20:30-31; 2 தெ. 1:10; 22 கொரி. 5:6;).

நான் அறிய முடியும் என்பதை உறுதிப்படுத்துகிற விதமாக, 1யோவான் புத்தகத்தில் 24 தடவைகள் தெரியும் என்ற வார்த்தையை யோவான் பயன்படுத்துகிறார். பெந்தெகொஸ்தே நாளிலே, பேதுரு எழுந்து நின்று: ..... இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக் கடவர்கள் என்றான். (அப். 2:36). ...நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்... என பவுல் எழுதினார். (2 தீமோ. 1:12) இந்த மனிதர்கள் அவர் இருப்பதற்கான ஆதாரங்களைக் கண்டனர். இன்று அற்புதங்கள் எதுவும் நடைபெறவில்லையென்றாலும், அவர்களுடைய சாட்சியங் களின் அடிப்படையில் அவர்கள் எப்படி அறிந்தார்களோ அப்படி நாமும் அறிய முடியும் என வேதாகமம் கூறுகிறது. (யோவான் 20:30-31).

7. நான் ஒரு கிறிஸ்தவன்; ஏனென்றால் இந்த உறுதி எனக்கு அளவற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. கிறிஸ்தவ வாழ்கையின் கனி உண்மையான மகிழ்ச்சியாகும். (1 பேதுரு 1:8) சிலுவையால் உண்டான தேவனுடைய சமாதானம் எனக்குண்டு. (கொலோ. 1:20) சங்கீதம் 103:11-12 வசனங்களை விட இனிமையான ஒரு வசனத்தைக் காண இயலாது. படித்துப் பாருங்கள்: பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக் கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள் மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்.

8. அநேக காரணங்களுக்காக நான் ஒரு கிறிஸ்தவனாக இருக்கிறேன். என்ற போதிலும், அவை எல்லாவற்றையும் விட நான் பரலோக ராஜ்யத்திற்குச் சென்று, என் கர்த்தரோடு வாழ விரும்புகிறேன் என்பது சிறப்பான காரணம். கர்த்தர் என் பெலனும் கேடகமுமாயிருக் கிறார்; என் இருதயம் அவரை நம்பியிருந்தது; நான் சகாயம் பெற்றேன்; ஆகையால் என் இருதயம் களிகூருகிறது; என் பாட்டினால் அவரைத் துதிப்பேன் (சங்கீதம் 28:7).

# இவருக்குச் செவி கொடுங்கள்

**Bro. Leon Barnes**

சிறிது நேரத்திற்கு உங்களை சீமோன் பேதுருவாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். இப்பொழுது, நீங்கள் இயேசுவால் தெரிந்து கொள்ளப் பட்ட பன்னிரெண்டு பேரில் ஒருவர். அவரைப் பின்பற்றும்படியாகவும், அவருக்காக வாழும்படியாகவும், நீங்கள் உங்கள் தொழிலையும், உங்கள் குடும்பத்தையும் விட்டு வந்துள்ளீர்கள். இந்த நாளிலே உங்கள் குருவானவர், உங்களோடு யாக்கோபையும், யோவானையும் கூட்டிக் கொண்டு, ஜெபிக்கும் படியாய் ஒரு மலைக்கு சென்று ஜெபித்துக் கொண்டி ருக்கும்போது, தூங்கி விடுகிறீர்கள். ஒருவேளை மலைக்கு ஏறிப்போன களைப்பாக இருந்திருக்கும்.

தூக்கத்தில் இருந்த நீங்கள், திடீரென திடுக்கிடுகிறீர்கள். கண்களைத் தேய்த்து விழித்துப் பார்த்தால், இயேசு முற்றிலும் மாறுபட்டவராக காட்சி தருகிறார். பனிக்கட்டி போன்று வெண்மையாக இருந்தார். அவரின் முழுத் தோற்றமும் பிரகாசித்தது. அது மாத்திரமல்ல, மோசேயும், எலியாவும் அவ ரோடு பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களோடு வர இருக்கும் தன்னு டைய மரணம் குறித்து பேசிக் கொண்டிருக்கிறார்.

இந்தச் சூழ்நிலையில் என்ன செய்ய வெண்டுமென்று தெரியாமல், இயேசுவை நோக்கி, " நாம் இங்கேயே இருப்பது நல்லது. மூன்று கூடாரத் தை இங்கே போடுவோம். உமக்கொன்றும், மோசேக்கொன்றும், எலியாவுக்கொன்றுமாக " என்று சொல்கிறீர்கள். இப்படிப் பேசி இன்னும் உங்கள் இருதயத்தின் எண்ணங்களையெல்லாம் வெளிக்கொணரு வதற்கு முன்பாக, ஒரு ஒளியுள்ள மேகம் அவர்கள் மேல் நிழலிட்டு; மேகங் களிலிருந்து இந்த விதமாக ஒரு சத்தம் பிறந்தது. " இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், **இவருக்குச் செவி கொடுங்கள்**". (மத். 17:1-5).

நீங்கள், உங்களை இன்னும் ஒரு பேதுருவாகவே பார்க்க முடிந் தால், நடந்த எல்லாச் சம்பவங்களும் உங்களை ஓர் அதிர்ச்சியில் ஆழ்த்தியி ருக்காதா?

சரி, நீங்கள் இயேசுவுக்கு சொன்ன ஆலோசனையில் என்ன தவறு நேர்ந்தது?

முதலாவதாக, இங்கே, மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்று நீங்கள் சொன்ன இந்த மலை தங்கி வாழ்வதற்கான ஒரு இடம் என்ற ஒரு தவறான எண்ணித்தை ஏற்படுத்தியது. காற்றோட்டமான, ஜன சந்தடியற்ற, மடாலயம் போன்ற இந்த மலையுச்சி குடியிருப்புக்கு ஏற்றது என்று நினைக்க வைத்தது. ஆனால், இயேசுவோ, அப்போஸ்தலர்களோ மலையுச்சியில் இருக்க வேண்டுமென்பது, தேவனுடைய திட்டத்தில் ஒரு

போதும் இருந்ததில்லை. மாறாக, அவர்கள் செய்ய வேண்டிய அனைத்து வேலைகளும் சமவெளியில் இருந்தது.

இரண்டாவதாக, சொன்ன ஆலோசனை தவறென்பதற்கு வேறொரு காரணம், அது மோசேயையும், எலியாவையும் இயேசுவுக்கு இணையானவர்களாகக் காட்டியது. அவர்கள் இருவரும், மகத்தான மனிதர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இயேசுவோ, மாம்சத்தில் இருந்த தேவன். (யோவா. 1 : 1, 14).

அடுத்து, பேதுருவின் ஆலோசனையில் இருந்த மிக முக்கியமான தவறு என்னவெனில், " *அவன் கவனிக்க நேரத்தில் பேசிக் கொண்டிருந்தது* ". அங்கே, தேவனுடைய பதில் இது தான், " *இவர் என்னுடைய நேசகுமாரன்* ", இவரில் பிரியமாயிருக்கிறேன். " *இவருக்குச் செவி கொடுங்கள்* " என்பது. நம்மனைவருக்கும், அடிக்கடி ஏற்படுகிற பிரச்சனை இதுதானே? பேதுருவைப் போலவே, நாம் சொல்வதற்கு ஏதோ இருக்கிறது என நினைக்கிறோம். நமக்கு ஏற்படுகிற சகல காரியங்களிலும், நாம் ஆலோசனை சொல்ல ஏதோ உண்டு என்று எண்ணுகிறோம். ஆனால், நாம் என்ன சொல்லவேண்டுமென்று சரியாகத் தெரியாதபொழுது, பேசாமல் மௌனமாக இருப்பதே புத்திசாலித்தனம். தேவன், இரண்டு காதுகளையும், ஒரு வாயையும் கொடுத்திருப்பதில் ஏதோ அடங்கியிருக்கிறது என யாரோ ஒருவர் சொன்னதில் உண்மை இருக்கிறதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

புதிய ஏற்பாட்டை எழுதின ஆசிரியர்களை இயேசுவும், பரிசுத்த ஆவியானவரும் வழி நடத்தினபோது, அவர்கள் வெளிப்படுத்தின பெரியதொரு உண்மையென்னவெனில், " *கேட்பதிலே* " கவனமாக இருக்க வேண்டுமென்பது. அப்போஸ்தலனாகிய யாக்கோபு, சொல்வதைப் பாருங்கள். " *ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்* ". (யாக். 1:19).

அடுத்தது என்ன சொல்ல வேண்டுமென்பதைத் தீர்மானிப்பதில் அதிக குறியாக நாம் இருந்தபடியால், கேட்க வேண்டுமென்று தேவன் எதிர்பார்த்த எவ்வளவு காரியங்களை நாம் தவற விட்டிருப்போம்? அநேகர், காதுகளிலிருந்தும் கேட்பதில்லை. நமக்கு, உண்மையாகவே பயன்தரக் கூடிய முக்கியமான காரியங்களைக் கற்றுக்கொள்ளக் கூடிய அளவுக்கு, கேள்வியிலே நாம் பக்குவப்படவில்லை.

இயேசுவும், மற்ற மூவரும் மலையிலிருந்து இறங்கி வந்த போது, யோவான் ஸ்நானகன் தான், முந்தி வர வேண்டிய எலியா என்று இயேசு, விளக்கிச் சொன்னதை கவனித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது, அவர் அவர்களை நோக்கி, " *மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் வரைக்கும், இந்த தரிசனத்தை ஒருவருக்கும் சொல்ல வேண்டாம்* " என்று கட்டளையிட்டார்.

தொடர்ந்து, அவர்கள் மலையடிவாரத்தைத் தொடுவதற்கு முன், ஒரு அலறலின் இரைச்சல் காதுக்கெட்டியது. அங்கே, பிசாசுகளைத்

துரத்தும் வல்லமையை இயேசுவிடமிருந்து பெற்றுக்கொண்ட சீடர்களிடம், பிசாசு பிடிக்கப்பட்டிருந்த ஒரு சிறுவன் கொண்டு வரப்பட்டிருந்தான். அவர்கள், தங்களால் ஆன மட்டும் முயற்சித்தும், அவைகளைத் துரத்த முடியவில்லை. சோர்த்து போன தகப்பன், மகனை இயேசுவிடம் கொண்டு வந்தான். " *ஆண்டவரே, என் மகனுக்கு இரங்கும்* " என்பதே அவன் மன்றாட்டு. இயேசு அந்த இளைஞனை சொஸ்தமாக்கி, அவர்களுடைய விசுவாசக் குறைவுக்காக சீடர்களைக் கடித்து கொண்டார்.

பேதுரு, யோவான், யாக்கோபு ஆகிய இவர்களை, விசுவாசத்தில் வளரச் செய்வதற்காகத் தான் இயேசு மலைக்கு கூட்டிப் போனாரோ? அவர்களின் பணி பள்ளத்தாக்கிலே இருந்தது. ஆனால் அந்தப் பணியை விசுவாசத்தோடும், பெலத்தோடும் செய்வதற்கான வல்லமை, மலையின் மீதான ஜெபத்திலும், தேவனுடைய வார்த்தைகளுக்குக் செவிகொடுப்பதிலுமே கிடைக்கிறது. ஆகவே, நாம் ஒவ்வொருவரும், இன்று, ஆவியில் வல்லமை பெற்ற மக்களாக இருக்க வேண்டுமானால் மறுரூப மலையைத் தேடிப் போய் ஏறத் தேவையில்லை. மாறாக, கிறிஸ்துவின் உபதேசங்களடங்கிய புதிய ஏற்பாட்டிற்கு செவி கொடுத்தால் போதுமானது. இது மிகவும் எளிமையானது. ஆனால், ஒப்புக்கொடுத்தல் தேவை. ஆகவே, ஒப்புக்கொடுப்பதின் மூலம், கிறிஸ்துவுக்கு செவி கொடுப்போம். ❋

## இவ்வுலகத்தில் கிறிஸ்தவர்கள் எப்படி வாழ வேண்டும்?

- உலகக் கவலையிலிருந்து விடுபட்டு வாழ வேண்டும் (மத். 13:22)
- நாம் நம் ஆத்துமாவை நஷ்டப்படுத்தாமல் வாழ வேண்டும் (மத். 16:26)
- நாம் இவ்வுலகத்தினர் செய்வது போல் பிறருக்கு இடறல் செய்யாமல் வாழ வேண்டும் (மத். 18:7)
- நாம் இவ்வுலக வாழ்க்கையை நேசிக்காமல் வாழ வேண்டும் (யோவான் 12:25)
- நாம் இப்பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கப்பட்ட வாழ்க்கையை வாழ வேண்டும் (கலாத்தியர் 1:4)
- நாம் இவ்வுலகத்தில் சுடர்களைப் போல் பிரகாசிக்கிறவர்களாய் வாழ வேண்டும் (பிலிப். 2:14)
- நாம் லௌகிக இச்சைகளை வெறுத்து தேவ பக்தியுள்ளவர்களாய் இவ்வுலகில் வாழ வேண்டும் (தீத்து. 2:12)
- நாம் உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்தவர்களாய் வாழ வேண்டும் (கொலோ. 2:20)

# விசுவாசித்தான்... அதை நீதியாக எண்ணினார்

**Bro. K. Pandian**

அருமையான தேவனுடைய பிள்ளைகளே! நாம் அனைவருமே தேவன் நம்மீது பிரியமாயிருக்க வேண்டும், மற்றவர்களைவிட விசேஷமாக நம்மை ஆசீர்வதிக்க வேண்டும் என்றெல்லாம், ஆசைப் படுகிறோம், நிச்சயமாய் அது நல்ல எதிர்பார்ப்புதான். அதே நேரத்தில் நாம் எப்படியிருக்க தேவன் விரும்புகிறார்; நம்மிடத்தில் தேவன் எதை எதிர் பார்க்கிறார்? என்பதையும் நாம் கவனித்துப் பார்க்க வேண்டும். ஆதியாகமம் 15 ம் அதிகாரத்தில், நம்ப இயலாத சந்ததி வாக்குத்தத்தத்தை தேவன் ஆபிரகாமுக்குச் சொன்னபோது (15:6) அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அனுக்கு நீதியாக எண்ணினார். அவனுடைய இத்தகைய விசுவாசத்தை தேவன் ஆபிரகாமுக்கு நீதியாக எண்ணினார் என்பது அவனுக்காக மாத்திரமல்ல இப்போது சபையில் உள்ள நமக்காகவும் எழுதப்பட்டுள்ளது (ரோமர் 4:23). தேவன் மேல் மனிதன் வைக்கும் விசுவாசம் தேவனால் அவனுக்கு நீதியாக எண்ணப் படுகிறது என்பதை இக்கட்டுரையில் பார்க்கலாம்.

மனிதனுக்குத் தேவையான எல்லா ஆசீர்வாதங்களும் தேவனிடம் உண்டு . ஆனால், அவரிடம் மனிதனுக்கு விசுவாசம் இருக் கின்றதா? தேவனுடைய வசனத்தைக் கேள்விபடுவதால் நம்மில் விசுவாசம் உண்டாகிறது. கேள்விபடாதபோது குறைகிற வாய்ப்புண்டு. எனவே தான் வாரத்திற்கு ஒரு முறை நாம் சபைகூடி வசனங்களைக் கேட்கும் படியான திட்டத்தை தேவன் கட்டாயமாக்கினார். தேவ வார்த்தை யின்படியான விசுவாசத்தை தேவன் அங்கீகரிக்கின்றார். ஆனால், அநேகர் வேதத்திற்குப் புறம்பாக நோன்பு நாட்கள், விரதங்கள், பாத யாத்திரை, பொருத்தனை போன்ற தங்கள் சரீரப்பிரகார வருத்தங்களை மேற்கொண்டு தங்களை மிகுந்த பக்திமான்களாக நினைத்துக் கொள் கிறார்கள். மாறாக தேவன் என்ன எதிர்பார்க்கிறார் என்பதே முக்கியம். யோவான் 6:44 ன் படி தேவன் நம்மை இழுத்துக் கொண்டதால் நாம் இன்று சபையில் இருக்கிறோம். சபை மக்கள் விசுவாசத்தில் வளர தேவன் ஊழியர்களைப் பயன்படுத்துகின்றார் (யாத். 14:31, 1 கொரி. 3:5) ஆண்ட வராகிய இயேசுவும் தேவனிடத்தில் விசுவாசமாயிருக்கவும் தம்மிடத்தில் விசுவாசமாயிருக்கவும் நம்மை உற்சாகப்படுத்துகிறார் (யோவான் 14:1). காரணம் நம்முடைய " விசுவாசமே " உலகத்தை ஜெயிக்கிற ஜெயமாய்

இருக்கிறது. அதன் மூலம் மட்டுமே நாம் அவருடைய ஆசீர்வாதங்களை சுதந்தரிக்க முடியும். இல்லாவிடில் சங்கீதம் 106 :24-ன் படியாக இஸ்ரயேல் ஜனம் அவருடைய வார்த்தையை விசுவாசியாமல் அருமையான தேசத்தை அசட்டை பண்ணி அழிந்து போனார்கள். தேவனுடைய வசனத்தைக் கேட்பவர்கள், கேட்டுக் கைக்கொள்பவர்களே உண்மையான பாக்கியவான்கள், ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று வேதம் தெளிவாகப் போதிக்கிறது.

தேவன் சொன்ன வார்த்தைகளை ஆபிரகாம் முழுமையாக நம்பினதால் அவன் விசுவாசத்தில் வல்லவன் ஆனான் (ரோமர் 4:21). நமக்கும் இன்றைக்கு, தேவனுடைய வார்த்தைகள் நாம் விசுவாசிப்பதற் காகத்தான் கொடுக்கப்பட்டுள்ளது. வாரந்தோறும் கட்டாயமாக நம் காதுகள் கேட்கத் தொனிக்கிறது. அதை விசுவாசமில்லாமல் கேட்போமானால் வசனம் நமக்குப் பிரயோஜனப்படாது (எபி. 4:2). ஆசீர்வாதமும் பெற்றுக் கொள்ள முடியாது ! சில உதாரணங்களைப் பார்ப்போம். மத். 8:13-ல் நூற்றுக்கதிபதியிடம் இயேசு சொன்னார். " நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது. அந்நேரமே அவன் எதிர்பார்த்தது நடந்தது. ஆகவே, இப்போதும் நம் வாழ்க்கையில் நாம் எதிர்பார்க்கும் நன்மைகள் நமக்குக் கிடைக்க நாம் செய்ய வேண்டியது தேவனிடத்தில் வைக்கும் விசுவாசமே. அதைத்தான் தேவன் நமக்கு நீதியாக எண்ணுவார். ஆண்டவர் இயேசுவும் நாம் வேண்டியதைப் பெற்றுக்கொள்ள இப்படிப்பட்ட நம்பிக்கை யின் அவசியத்தையே சுட்டிக் காண்பிக்கின்றார் (மாற்கு 11:22,24). இரண்டு குருடர்கள் பார்வையடைய ஆண்டவரிடம் வந்த போது " இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டு என்று விசுவாசிக்கிறீர்களா? என்று கேட்ட பின்பு உங்கள் விசுவாசத்தின்படியே ஆகக்கடவது" என்கிறார். தேவனுடைய வல்லமையும் ஆசீர்வாதமும் மனிதனுக்குக் கிடைக்க அவன் அவருடைய வல்லமையிலே நம்பிக்கை வைக்க வேண்டும். நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது என்று புலம்பிய யோபு பின்பு தெளிவடைந்து தனக்கு உதவக்கூடிய தேவனைப் பார்த்து சொல்கிறார்; " தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன் ". என்று தன் நம்பிக்கையை அறிக்கையிட்டான், நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினால் அறிக்கைப் பண்ணப்படும்.

ஒருவேளை நம் மனம் நம் எதிர்காலத்தைக் குறித்துப் பயப் படலாம். அதை நாம் ஊக்கப்படுத்தக்கூடாது. பயம், விசுவாசத்தின் எதிரி யாகும். ஆகவே தான் வேதம் முழுவதும் " பயப்படாதே, நான் இருக் கிறேன் " என்ற வாக்கியம் அடிக்கடி நம்மைத் தேற்றுகிற வாக்கியமாய்

இருக்கிறது. நமக்குத் தேவை அந்த வார்த்தையின் மீது நம்பிக்கை. "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு " என்று நம்புவதும், பேசுவதும் நம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்தும். கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார், நான் தாழ்ச்சி அடையேன் என்ற தாவீது பக்தனின் அறிக்கையும் நம் வாயில் இருக்க வேண்டும். நம்மில் அநேகர், பல இக்கட்டான நேரங்களில் அற்புதமாக நம்மைத் தேற்றிய தேவனை ருசி பார்த்திருக்கிறோம். அவை களை நாம் நினைத்துப் பார்த்து நம்முடைய தற்காலிக, தற்போதைய பிரச்சனையில் கலங்காமல் விசுவாசமாய் இருப்போம். மனுஷன் முகத்தைப் பார்க்கிறான், கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்று சாமுவேலிடம் கர்த்தர் சொன்னதை நினைவு கூருவோம். நம் இருதயத்தில் உள்ள விசுவாசத்தையே தேவன் கணக்கில் எடுத்துக் கொள் கிறார். அதனால் தான் சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரியே புகழப்படுவாள் என்கிறது வேதம்.

பல நேரங்களில் நமக்கு நேரிடும் பிரச்சனை, கவலைகளில் நாம் சோர்ந்து போகிறோம். அப்போது ஆண்டவர் இயேசு கடலில் மூழ்கிய பேருதுவைப் பார்த்துச் சொன்ன, " அற்ப விசுவாசியே ஏன் சந்தேகப் பட்டாய் " என்ற வார்த்தைகள் நம் காதுகளில் ஒலிக்க வேண்டும். உங்களு டைய பிரச்சனை ஒருவேளை பெரிதாகக் காணப்படலாம். உங்கள் சிந்தனைகளைப் பாதிக்கக் கூடியதாக இருக்கலாம். ஆனால், நம் தேவன் அதைக் காட்டிலும் பெரியவர் என்பதை நினைவுகூருங்கள். ஆண்டவர் இயேசு மார்த்தாளிடம் நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா? என்று விசுவாசத்தின் அவசியத்தை ஞாபக மூட்டுகிறார். ஆக மனக் கஷ்டங்கள் உண்டாகும் போது நமக்குத் தேவையானது விசுவாசமே! நாம் தேவனிடத்தில் கொண்டிருக்கும் நம்பிக்கையை, நம் இருதயத்திலிருந்து வசனங்களை எடுத்துப் பிசாசு குலைத்து போட முடியும். நமக்கு வரும் சோதனைகளில் நாம் வசனங்களில் நம்பிக்கையிழக்கக்கூடாது. நமக்கு உதவ இயேசு ஆண்டவர் உண்டு (எபி. 2:18). மற்றும் உலக இன்பங் களும், ஐசுவரியத்தின் மயக்கமும் நம் விசுவாசத்திற்குத் தடையாக இருப்பதை ஆண்டவர் தெளிவாக உரைத்திருக்கிறார். பலர் தேவனால் வருகிற மகிமைக்கு முக்கியத்துவம் தராமல், மனுஷரால் வருகிற மகிமைக்கு முக்கியத்துவம் தந்து விசுவாசத்தை அசட்டை பண்ணு கிறார்கள் என்று ஆண்டவர் சுட்டிக் காட்டினார். (யோவான் 5:44, 12:43) விசுவாசிகளாகிய நமக்குத் தேவன், நம் விசுவாசத்தை நீதியாக எண்ணி நம்மை ஆசீர்வதிப்பதினால் நமக்கு சந்தோஷமும், ஆத்தும இரட்சிப்பும் தருவதால் (1 பேதுரு 1:8,9) அவரை என்றென்றும் ஸ்தோத்தரிப்போம். கிறிஸ்துவின் கிருபை நம்மனைவரோடுங் கூட இருப்பதாக ஆமென். ❋



# கெட்ட குமாரன்

**Bro. K. பாஸ்கர்**

அன்பான வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள் பல.

கிறிஸ்தவ உலகில் கெட்ட குமாரனைக் குறித்து அறியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். எப்படிப்பட்ட பாவியாக இருந்தாலும் மனந்திரும்பி வரும் போது தேவன் ஏற்றுக்கொள்கிறார் என்பதை இயேசு இந்த உவமையின் மூலமாக விளக்குகிறார். இம்மாதத்தில் இதைக் குறித்துப் படிப்போமாக!.

## I. உவமை

ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். அவர்களில் இளையவன் தகப்பனை நோக்கி தகப்பனே ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும் என்றான். அந்தப்படி அவன் அவர்களுக்குத் தன் ஆஸ்தியைப் பங்கிட்டுக் கொடுத்தான். சில நாளைக்குப் பின்பு இளைய மகன் எல்லாவற்றையும் சேர்த்துக் கொண்டு தூரதேசத்திற்குப் புறப்பட்டுப் போய் அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணி தன் ஆஸ்தியை அழித்துப் போட்டான். எல்லாவற்றையும் அவன் செலவழித்த பின்பு அந்த தேசத்திலே கொடிய பஞ்சமுண்டாயிற்று அப்பொழுது அவன் குறைவுபடத் தொடங்கி அந்த தேசத்துக் குடிகளில் ஒருவனிடத்தில் போய் ஒட்டிக் கொண்டான். அந்தக் குடியானவன் அவனைத் தன் வயல்களில் பன்றிகளை மேய்க்கும்படி அனுப்பினான். அப்பொழுது பன்றிகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான். ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை. அவனுக்குப் புத்தி தெளிந்த போது அவன் என் தகப்பனுடைய கூலிக்காரரில் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது நானோ பசியினால் சாகிறேன் நான் எழுந்து என் தகப்பனிடத்திற்குப் போய் தகப்பனே பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ் செய்தேன் இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல. உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக் கொள்ளும் என்பேன் என்று சொல்லி எழுந்து புறப்பட்டுத் தன் தகப்பனிடத்தில் வந்தான். அவன் தூரத்திலே வரும்போதே அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு மனதுருகி ஓடி அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு அவனை முத்தஞ் செய்தான். குமாரன் தகப்பனை நோக்கி, தகப்பனே பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ் செய்தேன் இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொன்னான். அப்பொழுது

தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டு வந்து இவனுக்கு உடுத்தி இவன் கைக்கு மோதிரத்தையும், கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டு வந்து அடியுங்கள் நாம் புசித்து சந்தோஷமாயிருப்போம் என் குமாரனாகிய இவன் மரித்தான் திரும்பவும் உயிர்த்தான் காணாமற்போனான் திரும்பவும் காணப்பட்டான் என்றான் அப்படியே அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கி னார்கள் (லூக். 15:11,24).

## II. கெட்ட குமாரன் இழந்தது என்ன?

இவன் தன்னைக் குறித்தே அக்கறை கொண்டவனாக தன் மனம் போன போக்கில் சென்றான். ஆனால், தன் தகப்பனின் மனம் புண்படுவதைக் குறித்து அக்கறையற்றிருந்தான். அவன் வேண்டுமென்றே தன் தகப்பனை புண்படுத்தவில்லை. ஆனால், இவன் ஆஸ்தியைப் பங்கிட்டு கொடு என்பதை நல்லது என்று நினைத்த எண்ணங்கள் தன் தகப்பனின் மனதை புண்படுத்தும் என்பதை அறியவில்லை. சுய இஷ்டமே பாவத்தின் வேராகும். " உன் சுய புத்தியின் மேல் சாயாமல் உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கை யாயிருந்து உன் வழிகளிளெல்லாம் அவரை நினைத்துக் கொள். அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார் " (நீதி. 3:5,6).

இவன் தகப்பனோடு வாழும் சிலாக்கியத்தை இழந்தான். தன் தகப்பனோடு வாழும் சுகத்தை இழந்தான். பெருமையோடு வாழ வேண்டிய அவன் பன்றிகளோடு தங்கியிருந்தான். பன்றி என்பது அவர்களுக்கு ஒதுக்கப் பட்டது, அசுத்தமானது (லேவி. 11:7,8). தன் தகப்பனோடு சந்தோஷமாய் இளவரசனைப் போல செல்வத்துடன் வாழும் சிலாக்கியத்தை இழந்தான்! தன் உடமைகளை இழந்தான், தன் ஆஸ்தியை எவ்வளவு எளிதாய் பெற்றுச் சென்றானோ அவ்வளவு சுலபமாய் இழந்தான். தகப்பனை மறந்தவன் பஞ்சத்தில் அடிப்பட்டான். நாடிய நண்பர்களும் பணம் தீந்தவுடன் ஓடி விட்டனர். தான் பெற்ற சுகங்களும், தீய வழியின் இன்பங்களும், தன் நண்பர்களும் தன் தகப்பனக்கு ஈடு இணையாகாது என்பதை உணர்ந்தான். எல்லாவற்றையும் இழந்த நிலைமையில் நானோ பசியினால் சாகிறேன் என்றான் (லூக். 15:17). மூடன் பசியோடும், தாகத்தோடும் இருக்கிறான் (ஏசா. 32:6). இனிமேல் இவன் என்ன செய்வான்? உரிமையோடு தன் தகப்பனிடம் போக முடியுமா? இனிமேல் உலகில் வாழ வழியுண்டா? என்ற கேள்விகள் அவன் முன் விஸ்வரூபமெடுத்தது.

## III. கெட்ட குமாரன் செய்தது என்ன?


அவன் தன் நிலையை சீர் தூக்கிப் பார்த்தான். தன் வாழ்க்கையில் தன்னையே எடை போட்டுப் பார்த்தான்! " எனக்கு உணர்வைத்தாரும் அப்பொழுது நான் உமது வேதத்தைப் பற்றிக் கொண்டு என் முழு இருதயத் தோடும் அதைக் கைக்கொள்ளுவேன் " (சங். 119:34). தன் பாவத்தை





உணர்ந்தான். தான் ஒரு மூடன், மதிகேடன் என்பதை ஒப்புக் கொண்டான். இனிமேல் தனது தகப்பனின் குமாரன் என்று அழைக்கப்பட தான் லாயக் கற்றவன் என்று தீர்மானித்தான் (லூக். 15:13). நான் எழுந்து என் தகப்பனிடத் திற்குப் போவேன் என்று திட்டமாகத் தீர்மானித்தான். இந்த நல்ல முடிவை எடுக்க அவனுக்கு அநேக நாள் பிடித்தன. இன்றும் சிலர் தங்கள் பாவத்தின் தண்டனையை உணர்ந்தும் மனந்திரும்ப மறுக்கிறார்கள். அவர்கள் அனைவரும் மனந்திரும்பி தேவனிடத்திற்கு வரவேண்டும் (லூக். 15:20). "ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி தேவன் நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் " (2 பேதுரு 3:9) கெட்ட குமாரன் இப்பொழுது தனது மனந்திரும்புதலை செயலில் காட்டினான். தன் முடிவை சற்றேதும் மாற்றவில்லை. செயல்படத் தாமதிக்கவு மில்லை. வாக்கும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டும். அநேகர் இன்று கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொண்டு பாரம்பரியங்களுக்குக் கீழ்ப்படிந்து தெளிப்பு ஞான ஸ்நானம், பண்டிகை, லெந்து நாட்கள் என்று கொண்டாடி வருகின்றனர். சத்தியத்தை அறிந்தும் அதற்குக் கீழ்ப்படிவதில்லை! அவர்கள் அனைவரும் மனந்திரும்ப வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அவர்கள் கிறிஸ்துவின் உபதேசப்படி வாழ செயல்பட விருப்பமற்று இருக்கிறார்கள். இளைய மகன் மனந்திரும்பிய மைந்தனாக எழுந்து புறப்பட்டு தன் தகப்பனி டத்திற்கு வந்தான். தன் பாவத்தை அறிக்கையிட்டான். " தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான் " (நீதி. 28:13). இளைய மகன் அறிக்கை யிட்டான் தகப்பனே பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவம் செய்தேன் என்றான் (லூக். 15:21). கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினா ரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய் நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும் (ரோமர் 10:9,10).

மனந்திரும்பிய இளைய மகன் வீட்டிற்குத் திரும்ப வந்தான். பிரயாணம் கடுமையானதும், பசியோடும், வெறுங்கையோடும், வெறுங் கால் களோடும், கந்தையான வஸ்திரத்தோடும் அவலட்சணமான கோலத்தில் வந்து சேர்ந்தான். தூரத்தில் அவன் தகப்பன் அடையாளம் கண்டுகொண்டு அவனைக் கட்டி முத்தம் செய்தான். வேதத்திலே தேவனுடைய அன்பும், அரவணைப்பும் இங்கு தான் சொல்லப்பட்டது. அப்பொழுது அவன் தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தையும், மோதிரத் தையும், கால்களுக்கு பாதரட்சைகளும், கொழுத்த கன்றையும் அடியுங்கள் என்று உத்தரவு கொடுத்தான். என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான், காணாமற்போனான் திரும்பவும் காணப்பட்டான் என்றான். அப்படியே அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள் (லூக். 15:24) நாமும் நமது பாவத்திலிருந்து மனந்திரும்பி தேவனிடம் வரும்போது பரலோகத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் (லூக். 15:7). ❋

12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும்.
தேவைக்கு எங்களை தொடர்பு கொள்ளவும்.





World Evangelism
Gospel Media



**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV**

Every Monday 7:00-7:15 am and
Every Thursday 9:30-10:00 am
Every Saturday 7:15-7:30 am
} Contact : 98427 30382

**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**

TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile: 9443558041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV:**

TV:Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 a.m **on Rakshana TV:** (ANDRAPRADESH Contact Phone: 08842363722)

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**

Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNADAKA Contact Mobile: 09844 70763)

**P.K.Varghese in Malayalam on Hindi TV:**

TV:Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel. (KERALA Contact Mobile: 9447035465)



**Philemon & Kingsley in Tamil on Tamilan TV:**


TV:Every Tuesday 9.30-9.45 p.m and Every Sunday 6.45-7.00 a.m. (TAMILNADU Contact Mobile: 9244214421)


**Sunny, Francis & Vinay David in Hindi on Hindi TV:**


TV:Every Tuesday 7.00-7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile: 09810896789)


Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014**


# எங்களது இதர வெளியீடுகள்












சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட **சத்தியத்தின் குரல்** என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

## திருமறை தியானம்

### தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள் மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு, இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.